முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 28-6-57 | வெள்ளி | ஒலி 10

வரியாட்டும் செக்கு!

பண்டிதரின் 'பணிவு'- பாரிலே 'ஒரு புதுமை'!

பணிந்தார்; பணிந்தார்; பார் மெச்சும் பாரதத்தின் பிரதமர்!

எலிசபெத் ராணியின் கை குலுக்குவார்; அவர்தான் வேற்று மனிதன் ஒருவன் கால் தொழுதார்!

சிரியாவிலே பெரிய வரவேற்பு; நார்வேயிலே. நகர்வலம்; டென்மார்க்கிலே கோலாகலம்; ஸ்வீடனில் செல்வாக்கு!

—இருந்துமென்ன; அனைத்தையும் வீழ்த்தி விட்டது இந்தச் சரணாகதிப் படலம்!

சாய்ந்து விட்டார்-சமாதானத் தூதுவர்!

சிறிய நாட்டின் பிரதமர்தான்: இருந்தாலும் பெரிய நாடுகள் யாவும் அவர் உதட்டசைவுக்குக் காத்திருந்தன!

அணுகுண்டுகளை அடுக்கிக் கொண்டேபோகும் அமெரிக்கா அவர் ஆலோசனைக்கு மதிப்பு வைக்கிறது!

ஸ்டாலினையே வீழ்த்திய ரஷ்யா இவர் கூக்குரலுக்கு எதிர்க் குரல் கொடுக்கிறது!

அத்தகைய வீராதி வீரர்தான் வீழ்ந்து விட்டார்!

யாரிடம்?

அவரைத் தாள் 'பணியச் செய்தவர் யார்? இவரைப்போல் அகில உலகத்திற்கும் அறிமுகமானவரா? ஐ. நா. வரை தனது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டவரா?

அவரிடம் சைன்யம் அதிகம் உண்டா? அல்லது இவருக்கிருப்பதைப் போல சமாதானத் திறம்தான் இருக்கிறதா?

உலகம் சுகப்பட பஞ்சசில ஔஷதம் அளிக்க முடியுமா அவரால்? அடிக்கடி உலகப் பயணம் சென்று இந்தியாவின் சௌரவத்தை உயர்த்தியிருக்கிறாரா, அவர்?

—இவ்வளவு வினாக்களும் வெடித்துக் கிளம்பலாம், பண்டிதர் பணிந்துவிட்டார் என்ற வாக்கியம் பிறக்கும் போது!

ஆமாம்; உண்மையில் பண்டிதர் பணிந்தது மட்டுமல்ல; 'சாஸ்டாங்கமாக' விழுந்து நமஸ்காரமும் செய்திருக்கிறார்!

—அவரைப்போல சம அந்தஸ்து உடையவரிடம் அல்ல!

பண்டிதரைப் பணியவைத்தவர் புல்கானினோ ஐசனோவரோ அல்ல!

சாதாரண ஆண்டி! ஆரிய சமாஜத்தின் தலைமை ஆண்டி! அவரிடம்தான் பண்டிதர் வெள்ளைக் கொடி உயர்த்திச் சென்று வீழ்ந்து புரண்டிருக்கிறார்!

சுவாமி ஆத்மானந்தா—ஆரிய சமாஜத் தலைவர்!

பஞ்சாபிலே இப்போது ஒரு கிளர்ச்சி நடைபெற்று வருகிறதல்லவா?

இந்திக்கு உரிய இடம் தரப்படவில்லை; இந்திக்கு இப்போது இருப்பதைவிட அதிக இடம்; மதிப்பு; அரசாங்க மரியாதை வேண்டும்-என்று கிளர்ச்சி-அதாவது சத்யாகிரகம் நடத்தி வருகிறார்கள், இந்த ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஆண்டிகள்!

மாறன், எம். ஏ.,

சாதாரண சத்யாகிரகம் அல்ல; சிறிது பலாத்காரமும் சேர்ந்த போராட்டம்!

ஆமாம்; மந்திரிகளை அரசாங்க அலுவலகத்திற்குள்ளே செல்வதற்கு அனுமதிக்க மறுக்கிறார்கள்!

பாவம்; அலுவலகத்திற்கும் செல்ல முடியாமல், வீட்டிற்கும் திரும்ப முடியாமல் மந்திரிகள் திக்கு முக்காடிப் போகிறார்கள்!

அதுமட்டுமல்ல; போலீசார் வந்து இந்தப் பண்டாரங்களைக் கைது செய்தால் இவர்களில் சிலர் போலீஸ் வாகனங்களிலிருந்து குதித்துத் தப்பிக்கவும் முயற்சிக்கிறார்கள்!

—இந்த 'லட்சணத்திலே' நடைபெற்று வருகிறது, பஞ்சாபிலே ஆண்டிகள் தொடுத்து வரும் போராட்டம்!

அரசாங்கம் நினைத்திருந்தால் அந்தப் போராட்டத்தைக் கணநேரத்தில் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்! ஆண்டிகள் போராட்டம் அடைபட்டுப் போயிருக்கும்!

—இருந்தும் இந்தப்போராட்டத்துக்கு பஞ்சாப் மாநிலத்து காங்கிரஸ்காரர்களின் ஆதரவு இருக்கிறது!

அது மட்டுமா?

போலீசாரிடமிருந்து எப்போது 'சம்மன்' வரும்; எப்போது தன்னைக் கைது செய்து காராக்கிரகத்திற்கு அழைத்துப்போகப் போகிறார்களோ—என்று போராட்டம் துவங்கிய நாளிலிருந்து அனுப்பொழுதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அதன் தலைவர் சுவாமி ஆத்மானந்தாவுக்கோ அவர் எதிர்பார்த்ததைப்போல சிறை அழைப்பு வரவில்லை—

அதற்கு மாறாக பண்டித நேரு விடமிருந்து கடிதம் வந்திருக்கிறது!

தடியடிப் பிரயோகம் நடத்திப் போராட்டத்தை அடக்கியிருக்கலாம்—துப்பாக்கிகளைத் தூக்கிக் காட்டியிருந்தாலே போதும்; சாதுக்கள் பறந்திருப்பார்கள்!

—வழக்கமாக இந்த முறைகளைக் கையாண்டுதான் பண்டிதரின் ஜனநாயக அரசு எந்த வித நியாயமான போராட்டத்தையும் கண்மூடித்தனமாக அடக்குவதற்கு முயன்றிருக்கிறது!

—ஆனால் இந்திய வரலாற்றிலேயே முதல் தடவையாக பண்டித நேருவே—நாட்டின் முதன் மந்திரியே கேட்டிருக்கிறார்; வேண்டிக் கொண்டிருக்கிறார்—போராட்டத்தை நிறுத்தி விடுங்கள் என்று!

ஐசனோவரையும்; புல்கானினையும்; மாக்மில்லனையும் மட்டுமே பார்த்து அணுகுண்டு சோதனைகளை நிறுத்தி விடுங்கள்—என்று கர்ஜனை புரிந்து பழக்கப்பட்ட பண்டிதர் முதல் முறையாக உள்நாட்டு விஷயங்களிலே—அதுவும் ஒரு ஆரிய சமாஜத்துச் சன்யாசியைப் பார்த்து—தயவு செய்து போராட்டத்தை நிறுத்திவிடுங்கள் என்று கோரிக்கை பிறப்பித்திருக்கிறார்!

இதைத் தோல்வி—சரணாகதி—பணிவு—சாய்வு—வீழ்ச்சி—என்பதைத் தவிர வேறெந்த வார்த்தைகளைக் கொண்டு வர்ணிப்பது?

ஆமாம்; வீழ்ச்சிதான்! மாடல மறையோன் என்ற ஆரியனின் அடிபணிந்தானே மாவீரன் சேரன் செங்குட்டுவன்—அதைவிடக் கேவலமான வீழ்ச்சி ஆரிய சமாஜப் பண்டாரத்தின் முன்னே பண்டிதர் சரணடைந்தது!

தென்னகத்திலே ஆந்திரம் என்ற பெயரிலே தெலுங்குச் சீமை தனியாகப் பிரிய வேண்டுமென்று சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தாரே உத்தமர் பொட்டி சீராமுலு—அப்போதெல்லாம்மூடிக்கிடந்த பண்டிதர் பேனா இப்போதுதான் திறந்திருக்கிறது!

விருது நகரத்திலே சென்னையைத் தமிழ் நாடாக்கக் கருதி; பட்டினி கிடந்து கண்ணை மூடினாரே; தூய தமிழ் மகனார் சங்கரலிங்கனார்—அவரைச் சாவிலிருந்து தடுத்து நிறுத்துவதற்கு அசையாத அவரது கரம் இப்போதுதான் அசைந்திருக்கிறது!

கேவலம் அதுவும் சில பண்டாரங்கள் கைதிகளாக மாறுவதைத் தடை செய்வதற்காக!

—இதைவிட வேறுவேடிக்கை இந்த இருபதாம் நூற்றாண்டிலே வேறு என்ன இருக்க முடியும்?

பண்டிதர் சுவாமி ஆத்மானந்தாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஏன் எழுதியிருக்கிறார்?

சுவாமி ஆத்மானந்தா பண்டிதருக்கு, அவர் பாரதத்தின் பிரதமர் என்ற முறையிலே தனது கோரிக்கைகளைத் தெரிவித்திருந்தாரா?

"இன்னது நீங்கள் செய்ய வேண்டும்; அல்லது செய்வதாக

❋ 4-ம் பக்கம் பார்க்க





வெள்ளி 28—6—57 சென்னை

அஸ்ஸாம் எழுச்சி!

தன்மானமுள்ள ஒரு மாநில அரசாங்கம் எப்படி மத்திய அரசாங்கத்தின் கெடுபிடியையும், யதேச்சாதிகாரத்தையும் எதிர்த்து அறப்போர் தொடுக்கும் என்பதற்கு சான்றுபோல் சமீபத்திய அஸ்ஸாம் நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன.

அஸ்ஸாம் வடநாட்டின் ஒரு அங்கம். இருந்தாலும் அதனாலேயே வடநாட்டு மத்திய அரசாங்கத்தின் ஆதிக்க உணர்ச்சியைக் கட்டுப்பாட்டுடன் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பது அஸ்ஸாமின் வேகத்தையும், சுயமரியாதை உணர்ச்சியையும், மட்டுமல்ல; அது மத்திய அரசாங்கம் என்னும் அமைப்பு எவ்வளவு ஆதிக்க வெறி பிடித்தது என்பதையும்; அந்த ஆதிக்க வெறியை வெற்றி கொள்ள மாநில அரசுகள் எப்படிக் களம் அமைத்துப் போராட வேண்டுமென்பதையும் உணர்த்துவதாய் இருக்கிறது.

அஸ்ஸாமிலே ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்பது அஸ்ஸாம் மக்களது வெகு நாளைய உள்ளக் கிடக்கை.

ஆனால் திடீரென்று மத்திய அரசாங்கம் எந்தத் தூண்டுதலின் பேரிலோ அந்த எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையை அஸ்ஸாமில் நிறுவாமல் பீகாரில் நிறுவுவது என்று முடிவு செய்து விட்டது.

இதற்குப் பிறகு அஸ்ஸாமின் நிலைமை என்ன?

"நாம் என்ன செய்ய முடியும்? அஸ்ஸாம் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்!"—என்று அந்த மாநிலத்து அரசாங்கமும், பொதுமக்களும் வாளாவிருந்து விட்டார்களா?

இல்லை

கோதித்தெழுந்து மத்திய அரசாங்கத்தின் வன்னெஞ்சத்தையும், வக்ரபுத்தியையும் கண்டிக்க முனைந்திருக்கிறார்கள். அஸ்ஸாம் பொது மக்கள் மட்டுமல்ல; அரசாங்கமும் அந்தக் காரியத்திலே முழுமனதோடு ஈடுபட்டிருக்கிறது!

'அஸ்ஸாமிலே காங்கிரஸ் அல்லாத வேறொரு எதிர்க்கட்சியொன்று பதவியிலிருக்கிறதோ? அதனால்தான் அது மத்திய அரசாங்கத்தோடு போர் தொடுத்திருக்கிறதோ?'—என்று யாரும் எண்ணிவிட வேண்டாம்.

காங்கிரஸ் கட்சியே பதவி வகிக்கிறது. காங்கிரஸ்தான் மத்திய அரசாங்கத்தோடு போரும் தொடுத்திருக்கிறது.

'எண்ணெய் சுத்திகரிப்பு சாலை அஸ்ஸாமில் இருந்தாலென்ன? பீகாரில் இருந்தால் என்ன? ஏதோ இந்தியாவின் எங்கோ ஒரு பகுதியில் அமைந்தால் அதுவே போதுமானது'—அங்குள்ள அமைச்சர்கள் யாரும் கூப்பாடு போடவில்லை இப்படி.

'மந்திரி சபையை உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டும்!'

'டில்லியின் பொறுப்பற்ற தன்மையைக் கண்டிக்க வேண்டும்!'

—என்றெல்லாம் அங்கே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

ஏதோ அஸ்ஸாமிலே ஒரு மாபெரும் அரசியல் மாற்றம் நடைபெற்று விட்டதைப்போல அந்த மாநிலத்திலே மத்திய அரசாங்கத்தை எதிர்த்து ஒரு எழுச்சி உதயமாகியிருக்கிறது!

அது மட்டுமல்ல; மேலிடத்தில் கலந்து பேசுவதற்காக அஸ்ஸாம் காங்கிரஸ் தலைவர் விமலா பிரசாத் தலைமையிலே தேபரைக் காண ஒரு தூதுகோஷ்டியொன்றும் புறப்பட்டுச் சென்றிருக்கிறது.

குழுவினரைச் சந்தித்த தேபர், அஸ்ஸாம் மக்களின் உள்ளப்பாங்கை அவர்கள் வாயிலாக உணர்ந்துகொண்டு; "மந்திரி சபை ராஜிநாமா போன்ற எந்தவித அவசர நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம்" என்று வந்தவர்களை வருந்திக் கேட்டுக்கொண்டாராம்!

பதவியை ராஜிநாமா செய்யத் தயாராயிருக்கிறார்களாம்!

தேபர் மட்டும் தடுத்து நிறுத்தியிராவிடில் இந்நேரம் அவர்கள் மத்திய அரசாங்கத்தைக் கண்டிக்கு முகத்தான் பதவியையே துறந்திருப்பார்களாம்!

அதே நேரத்திலேதான் நாம் அஸ்ஸாம் அரசாங்கத்திலே அங்கம் வகிக்கும் தன்மான வீரர்களோடு சென்னையின் பதவித் தேனிலே மிதந்துகொண்டிருக்கும் மரக்கட்டை பண்பு கொண்ட மந்திரிகளையும் ஒப்பிட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இங்கும்தான் தமிழ் நாட்டின் உடைமையாம் தேவிகுளம் பீர்மேடு பகுதிகளைத் தமிழர்களிடமிருந்து பிடுங்கி கேரளத்திடம் ஒப்புவித்தார்கள்.

ஆனாலும் இதை எதிர்த்து எந்த ஒரு அமைச்சராவது அல்லது காங்கிரஸ்காரராவது வாய் திறந்ததுண்டா?

இல்லை; பதவிக்கு எங்கே ஆபத்து வந்துவிடுமோ என்று அவர்கள் அனைவரும் தாய் நாட்டின் துரோகிகளாக மாறி விட்டார்கள்! வருங்காலம் அவர்கள் சமாதியிலே காறி உமிழுமே என்பதைப் பற்றியும் கவலைப்படாமல் இருந்து விட்டார்கள்.

அது மட்டுமல்ல; தேவிகுளம், பீர்மேடு தமிழகத்தில் இருந்தாலென்ன; கேரளத்தில் இருந்தாலென்ன—என்ன குறைந்து விட்டது இப்போது?—என்றும் அவர்கள் ஒட்டாரம் பேசத் தயங்கினார்கள் இல்லை.

அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் வெகு அழகாகக் குறிப்பிட்டார்கள்:

"வீட்டிற்குள் கள்ளர் புகுந்து சாமான்களை எல்லாம் திருடி மூட்டை கட்டும்போது ஒருவன் சொல்கிறான்—'இந்த வெள்ளிச்சாமான்களை, தங்க நகைகளோடு சேர்த்துக் கட்டுகிறாயே'—என்று! மற்றவனோ, 'வெளியில் போய் எல்லாவற்றையும் பிரித்துக் கொள்ளலாம்' என்கிறான். இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டே, படுத்திருக்கிற வீட்டுக்குரியவனோ; 'நம்மை ஒன்றும் செய்யாமல் அவர்கள் போனால் போதும்; எதை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லட்டும்' என்று கருதுகிறான். அந்த வீட்டுக்காரனைப்போல் காமராசர், 'தமிழ் நாட்டிலிருந்து எவர் வேண்டுமானாலும்—எதை வேண்டுமாயினும் எடுத்துச் செல்லட்டும்; நாம் பதவியிலிருக்கிறவரையில் இலாபம்' என்று கருதுகிறார்!"

—அஸ்ஸாம் காங்கிரசாரது தன்மான உணர்ச்சி இவர்களுக்கு எப்போதுதான் வருமோ?

அஸ்ஸாமுக்கு 'எண்ணெய்' இல்லை!



—('சங்கர்ஸ் வீக்லி')

வராத கடிதத்திற்குப் பதில்— வரைந்ததற்குக் காரணம் யாதோ?

❋ 2-ம் பக்கத் தொடர்ச்சி

வாக்குறுதியளிக்க வேண்டும். அப்போதுதான் நான் போராட்டத்தை நிறுத்த முடியும். அதற்கு உங்கள் அன்பான பதில் தேவை'' என்று சுவாமியார் பண்டிதருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தாரா?

இல்லை; இல்லை!

இந்தி ஆதரவுப் போராட்டத்தின் முதல் சர்வாதிகாரியாக இருந்துவரும் சுவாமி ஆத்மானந்தா பண்டிதருக்குத் தனிப்பட்ட முறையில் விலாசமிட்டு எந்தக் கடிதமும் எழுதவில்லை.

சுவாமியார் பஞ்சாப் பத்திரிகையிலே "பண்டித நேருவிற்கு ஒரு திறந்த கடிதம்" என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை எழுதியிருந்தார்!

திறந்த கடிதம் — அதுவும் ஒரு பத்திரிகையில் எழுதுவதென்பது பொதுவாக எழுத்தாளர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்கிற கட்டுரை வடிவமாகும்!

அதைப் போலவேதான் சுவாமியார் அந்தக் கட்டுரையில் தனது கருத்தினை எழுதி, அதைப் பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்.

—ஆனால் இந்தத் 'திறந்த கடிதத்தை'ச் சாமியார் பண்டித நேருவின் பெயருக்கு அஞ்சல் செய்யவேயில்லை!

ஏதோ ஒரு பத்திரிகையில் வந்த 'திறந்த கடிதம்'தான்!

—பத்திரிக்கைகளில் வரும் திறந்த கடிதங்களுக்கு இது வரை எந்த அமைச்சரும் பொறுப்புடன் பதில் வரைந்தது கிடையாது!

ஆனால் பண்டிதர்தான் அந்தக் கைங்கரியத்தை ஆரிய சமாஜத்துச் சாமியாருக்கு வரைந்திருக்கிறார்!

இதோ அந்தக் கடிதம்:

"என் அன்புள்ள சாமி ஆத்மானந்த்ஜி!

மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்பு நீங்கள் எனக்கு எழுதியதாகச் சொல்லப்பட்ட ஒரு திறந்த கடிதத்தை நான் பத்திரிகையிலே படித்தேன்."

—சாமியார் பத்திரிகையிலே எழுதியிருந்த கடிதத்தைப் படித்தாராம்! ஒப்புகிறார் அவர்!

பத்திரிகையிலே வெளிவரும் முக்கியமான செய்திகளை அவர் படிப்பதுதான் வழக்கமாம்!

ஆனால் முன்பு சென்னை வந்தபோதுதான் அவர் குறிப்பிட்டார்—சந்தேகத்தோடு—ஏதும் முக்கியத்துவம் தர விரும்பாததைப் போல—அலட்சிய மனோபாவத்தோடு—.

"இங்கு ஏதோ ஒரு வகுப்புவாதக் கட்சி இருக்கிறதாமே; அதன் பெயர் என்ன?...திராவிட..."

—என்று இழுத்தாராம்; பிறகு பக்கத்திலிருந்த காமராசர் "திராவிட முன்னேற்றக் கழகம்" என்று அடியெடுத்துக் கொடுத்தாராம்!

—பண்டித நேருவுக்கு; ஆரிய சமாஜத்துப் பண்டாரங்கள் எழுதுகிற திறந்த கடிதங்களையெல்லாம் ஒரு எழுத்து கூட விடாமல் அலசி அலசிப் படிக்கிற பண்டித நேருவுக்கு— தமிழகத்திலே காங்கிரசுக்கு எதிராக உதய சூரியன் போல் இருக்கிற ஒரு மகத்தான எதிர்க் கட்சியின் பெயரா மறந்து விட்டது?

அல்ல; அல்ல; கட்டாயம் அவருக்குத் தெரியும்—'திராவிட' என்பதற்கு அடுத்தாற் போல் தொடர்ந்து என்ன குறிப்பிட வேண்டுமென்று!

தெரிந்தும் அவர் குறிப்பிடாமல் இருந்தார்—ஏன்?

பஞ்சசீலமும் அணுகுண்டு பிரச்சினைகளும்; ஐசனோவரும் புல்கானினும்; நாசரும் டிட்டோவும் மாறி மாறி சிந்திக்கப்படுகிற அவரது அகில உலகப் பரந்த—விரிந்த—கண்ணோட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம்—என்ற மூன்று சொற்கள் நினைவில் இருக்க வேண்டிய அளவுக்கு சத்தற்றவைகளாம்! சக்கைகளாம்!

—இப்படி ஒரு எண்ணத்தை அவர் அன்று ஜிம்கானா மைதானத்திலே கூடியிருந்த மக்கட் திரளுக்குக் காட்ட விரும்புகிறாராம்!

—இவ்வாறெல்லாம் வீம்பு செய்த அதே பண்டிதர்தான் இப்போது பதிலெழுதுகிறார், பத்திரிகைகளில் வெளிவந்த சாமியாரின் திறந்த கடிதத்தைப் படித்தேன் என்று! கேள்விப்பட்டேன் என்று கூட அலட்சியம் தொனிக்க அவர் குறிப்பிட விரும்பவில்லை; படித்தேன் என்று பட்டவர்த்தனமாக எழுதுகிறார்!

அடுத்து:

"இந்தக் கடிதத்தைப் பெறுவதற்காக நான் காத்திருந்தேன்; ஆனால் அது வரவில்லை."

காதலியிடமிருந்து கடிதம் இன்று வரும்; நாளை வரும்—என்று எதிர் பார்க்கும் காதலனைப் போல ஆரிய சமாஜத்துச் சாமியாரிடமிருந்து 'மூடிய கடிதம்' தனக்கு வருமென்று 'ஆசியாவின் ஜோதி' காத்திருந்தாராம்! பாவம்; அந்தச் சாமியார் பண்டிதரை அந்த அளவுக்குக்கூட மதிக்காமல் திறந்த கடிதத்தை ஒரு உறையிலிட்டு மூடி அவருக்கு அனுப்பக்கூட இல்லையாம்! கவர் விலை அரையணா உயரும் என்று அறிவித்தாரே நிதியமைச்சர் அதன் காரணமோ என்னவோ, 'ஆத்மானந்த்ஜி' பேசாமலேயிருந்து விட்டார்! இருந்தாலும் பிரதமர் என்ன செய்தார்? இதோ அவரது வாசகங்களையே படியுங்கள் :

"அந்தக் கடிதம் எழுதியதின் நோக்கம் பத்திரிகைக்கு அனுப்புவதே; எனக்கு அனுப்புவது அல்ல—என்பதாகவே இருக்கலாம். அந்தக் கடிதத்தின் நகல் எனக்கு வந்து சேருமா என்பது எனக்குத் தெரியவில்லை. நான் நாளை இந்தியாவைவிட்டுப் போவதாலும், ஒரு மாதம் வெளியில் இருக்கப் போவதாலும் என்னால் காத்திருக்க இயலாது.

"பத்திரிகையில் வந்த கடிதத்தின் விவரத்திலும் அதன் சரியான தன்மையிலும் நம்பிக்கை வைத்து வெளிநாடு செல்லும் இந்தத் தருணத்தில் இந்தப் பதிலைத் தீட்டுகிறேன். நான் உங்கள் கடிதத்திற்குப் பதில் எழுதாமல் இருந்து விட்டேன் என்று நீங்கள் உணர வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அப்படி இருப்பது மரியாதைக் குறைவுமாகும்!"

—மரியாதைக் குறைவாம்! ஒரு போராட்டத்தின் முதல் சர்வாதிகாரி பொறுப்புணர்ந்து பத்திரிகைக்கு அனுப்பிய கடிதத்தின் நகலைப் பிரதமருக்கு அனுப்பாமல் இருந்ததால் அந்த மரியாதைக் குறைவு ஏற்பட்டு விடாதாம்; ஆனால் அந்தத் திறந்த கடிதத்திற்கு பண்டித நேரு பதில் எழுதாததால் மட்டுமே ஏற்பட்டுவிடுமாம்!

முடிவு இன்றோ; நாளையோ; இந்தக் கணமோ; மறுகணமோ என்று இருந்த சங்கரலிங்கனாரை சாவிலிருந்து மீட்பதற்கு முயலாததால் மரியாதைக் குறைவு ஏற்பட்டு விடவில்லையாம்! ஆனால் பண்டாரங்கள் சிலர் சேர்ந்து கொண்டு மது வெறியைவிடக் கொடியமொழி வெறி தலைக்கேறப்பெற்று கூத்தாடும்போது அவர்கள் தலைவருக்கு சம்மந்தமில்லாமல்—சந்தர்ப்பம் ஏற்படாமல் — பதிலெழுதாமல் போகிற காரணத்தால் மட்டுமே அந்த 'மரியாதை' உதிர்ந்து விடுமாம்!

மேலும் அவர் எழுதுகிறார்:

"நான் உங்கள் கடிதத்தைக் கவனமாகப் படித்தேன். பஞ்சாபிலே நிலவிவரும் மொழி வேற்றுமையைப் பற்றிய உண்மைகளை நான் முழுதும் சேகரிக்க வேண்டுமென்று கருத்து தெரிவிக்கிறீர்கள்...பல முகாந்திரங்களிலிருந்து என்னால் முடிந்தவரை நான் உண்மைகளைச் சேகரிப்பது ஒரு பக்கமிருந்தாலும், உங்களுக்கு நினைவிருக்கலாம்; உங்களையும், மதிப்புக்குரிய உங்களது கூட்டாளிகளில் சிலரையும் சந்திக்கும் அனுகூலத்தை நான் பெற்றிருக்கிறேன். உங்கள் நிலையை அறிந்து கொள்வதற்கு அன்று நாம் நடத்திய நீண்ட பேச்சு வார்த்தையைவிட வேறு நல்ல முகாந்திரம் வேறு என்ன இருக்க முடியும்?"

—நாமும்தான் கேட்கிறோம் பண்டிதருடைய உண்மையான உள்ளப்பாங்கை— தென்னகத்தின்பால் வஞ்சகமும் வன்னெஞ்சமும் கொண்ட அவரது அந்தரங்கத்தைத் தெரிந்து கொள்ள இதைவிட வேறு என்ன முகாந்திரம் இருக்க முடியும்?

ஆயிரம் மைல்கள் தாண்டி தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்காக இங்கிருந்து டெல்லி சென்றார்கள் என். ஜி. ஓ. க்களின் பிரதிநிதிகள். அப்போதும் இப்படித்தான் பண்டிதர் வெளிநாடு புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவர்களைச் சந்தித்து சில வார்த்தைகள் பேச முடியவில்லை, பாரதத்தின் முதல்வருக்கு!

நேரில் பார்ப்பது கூட முடியாது என்று மூர்க்கத்தனமாகப் பதில் கிடைக்கச் செய்தார்!

அதே நேருதான் சில ஆரிய சமாஜத்துப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்!

அந்த உரையாடலைத்தான் பஞ்சாப் மொழி நிலவரத்தைத் தெரிந்து கொள்ள சரியானதொரு முகாந்திரமென்று வர்ணிக்கிறார்!

முன்பு வெளிநாடு செல்கிற காரணத்தால் பண்டித நேருவுக்கு என். ஜி. ஓ. பிரதிநிதிகளைச் சந்திக்க முடியவில்லை.

இப்போதும் அவ... வெளிநாட்டுக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் அவருக்கு

❋ 10-ம் பக்கம் பார்க்க

"திராவிட முன்னேற்றக் கழகம் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளை வைத்திருப்பது போலவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்று சொல்கிறார்கள்; உண்மையாகவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்பதைத்தான் நான் பெரிதும் உணர்ந்து வரவேற்கிறேன்.

"கடமை—பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

"அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக்கொள்ளாததிலே இருக்கின்றது.

"அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய சங்கங்களை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது."

—அறிஞர் அண்ணா

இதுதான் கலாச்சாரம்!

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.,

'டாஜ் ஹோட்டலில்' அன்று ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தது. பியானோ ஆங்கில கீதம் இசைக்க ஆடவரும் பெண்டிரும் ஜோடி ஜோடியாக ஆடிக்கொண்டிருந்தனர். மிஸ்டர் சென் மிஸ் மேரியோடு ஆடிக்கொண்டிருந்தாலும் அவருடைய கவனமெல்லாம் திருமதி நளினி ரஞ்சன்மீதே பதிந்திருந்தது!

நளினி ரஞ்சன்! நாட்டியக் கலையின் லளிதங்கள் அத்தனையும் அந்தப் பொன்னவிர் மேனியில் அப்படியே அடைக்கலம் புகுந்திருந்தன. பரத கலையின் ஏகப் பிரதிநிதி மட்டுமல்ல அவள்! இதோ, இந்த ஆங்கில 'பால் டான்சை' எவ்வளவு அனாயாசமாக ஆடுகிறாள்! கால்களில்தான் எவ்வளவு லாவகம்! இசையோடு ஜதி கூட்டும் அந்த அடிகள்......

கவனம் சிதறவே, மிஸ்டர் சென் ஆடுவதில் ஏற்பட்ட பிசகை மிஸ் மேரி உணர்ந்தாள். சுவையற்றுச் செய்யும் செயலில் மகிழ்ச்சி எங்கிருந்து பிறக்கும்? ......பியானோ இசை நின்றது! ஜோடிகள் பிரிந்தன...சென், மேரியைப் பற்றிக் கவலைப்படாமல் நளினி ரஞ்சன் இருக்கும் இடம் நோக்கி விரைந்தார்.

"எக்சலன்ட் நளினி! கீழ் நாட்டுக் கலையும் மேல் நாட்டுக் கலையும் உன்னிடம் இரண்டறக் கலந்து விட்டன. நம்முடைய கலாச்சாரத் தூதுக் குழுவிற்குப் பின்னால் நிறையப் பெருமைவர இருக்கிறது"—உள்ளத்து உணர்ச்சிகளைப் பாராட்டுரையாகக் கொட்டினார் சென்!

நளினியின் முகம் 'குப்' பென்று சிவந்தது. கணவன் ரஞ்சனைப் பெருமிதத்தோடு கடைக்கண்ணால் பார்த்தாள். அவருடைய முகத்தில் 'அசடு' வழிந்து கொண்டிருந்தது!

"மிஸ்டர் சென்! உங்களைப் போன்ற கவிஞர் ஒருவரால் புகழப்படுவதைவிட வேறென்ன பெரியதொரு சிறப்பு இருக்க முடியும்? நீங்கள் மட்டும் என்னவாம்? இலக்கியத்தின் பிரதிநிதி! இலக்கியம்தானே இதர கலைகளுக்கெல்லாம் தாய்......!"—நளினி முகமன் பேசினாள்!

சென் உலகத்தையே மறந்தார். எல்லாம் நளினி மயமாக அவருக்குப் பட்டது.

அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே சென்னின் மனைவி சுபத்ரா அங்கு வந்துசேர்ந்தாள். சென் மனைவியை ரஞ்சனுக்கும் நளினிக்கும் அறிமுகப்படுத்தினார். நால்வரும் வெவ்வேறு வகையான எண்ணங்கள் மனத்தில் நிழலாட, டீ சாப்பிடச் சென்றனர்.

* * *

மறுநாள் மாலை. கலாச்சாரத் தூதுக்குழு அன்றுதான் மாஸ்கோவிற்குப் பயணமாகிறது. 'சந்தா குரூஸ்' விமான நிலையத்தில் வழியனுப்பும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நளினி, சென் உட்பட சுமார் பதினொரு பேர் கொண்ட கலாச்சாரக் குழு பாரதநாட்டின் பண்பாட்டையும் கலைத்திறனையும் ரஷ்ய நாட்டுக்கு உணர்த்த புறப்பட்டுச் செல்லுகிறது. கவிஞர் சென்தான் தூதுக்குழுவின் தலைவர்!

மனைவியை வழியனுப்ப ரஞ்சனும், கணவனை வழியனுப்ப சுபத்ராவும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். சைரன் ஊதியது. தூதுக்குழு அங்கத்தினர்கள் ஒவ்வொருவராகப் படிகளில் ஏறி விமானத்திற்குள் நுழைந்தனர். கடைசியாக நளினியும் சென்னும் படிகளில் ஏறி விமானத்தின் நுழைவுவாயிலில் நின்றனர். கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது. கைகளை ஆட்டி விடைபெற்றுக் கொண்டபின் கைகளைக் கோர்த்துக் கொண்டு உள்ளே சென்றனர். விமானம் புறப்பட்டு விண்ணில் மறைந்தது! தூதுக்குழு செய்யவிருக்கும் சாதனை பற்றி அனைவரும் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டே சென்றனர். இரண்டு ஜீவன்கள் மட்டும் விரக்தி மனப்பான்மையோடு நின்று கொண்டிருந்தன.

"சுபத்ரா!"

கனவிலிருந்து விடுபட்டவள் போல் திரும்பிப் பார்த்தாள். நளினியின் கணவர் ரஞ்சன்தான் அழைத்தார்.

"விமானம் மறைந்தபின்னும் கூடப் பார்வையைத் திருப்ப மாட்டீர்கள் போலிருக்கிறதே!—ரஞ்சன் சுபத்ராவை வேடிக்கையாகக் கேட்டார்.

சுபத்ரா சுவையில்லாமல் சிரித்தாள். எங்கோ ஆழத்திலிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.

'நேரே வீட்டுக்குத்தானே போகிறீர்கள்?' —ரஞ்சன் கேட்டார்.

'ஆமாம்,'' என்று தலையசைத்தாள் சுபத்ரா.

"என்னுடைய காரிலேயே போய் விடலாமே,'' என்றார் அவர்.

''இல்லை; டாக்சியில் போய் விடுகிறேன்!''

"சேச்சே, சும்மா வாருங்கள்; என்னுடைய காரிலேயே போய் விடலாம்,'' என்று கூறிக்கொண்டே காரின் முன் சீட் கதவைத் திறந்து விட்டார். மேற்கொண்டு மறுக்காமல் சுபத்ராவும் காரில் ஏறிக் கொண்டாள். ரஞ்சனும் அவளருகில் அமர்ந்து காரை ஓட்ட ஆரம்பித்தார்.

* * *

மாஸ்கோ. லெனின் கிராட், ஸ்டாலின் கிராட்— எங்கு பார்த்தாலும் நளினியின் பேச்சுத்தான். ரஷ்ய நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் நளினியின் படத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டு. பெருமைப்படுத்தின. இலக்கிய ஏடுகளெல்லாம் அவளுடைய கலைத்திறம் பற்றியும், சுவைமிக்க பழக்க வழக்கங்கள் பற்றியும் தலையங்கமே தீட்டின! நளினியின் புகழொளியில் இதர கலைஞர்கள் மறைந்தே போனார்கள்.

பத்திரிகைக்காரர்களுக்குப் பேட்டியளிக்கவே நளினிக்குப் பொழுது போகாமல் இருந்தது. ஆயிரக் கணக்கான 'ரூபில்'கள் வெகுமதியளித்து கட்டுரை அவளிடம் வேண்டி நின்ற பத்திரிகைகள் ஏராளம். விளம்பரம் அனைத்தும் அவளுடைய புகைப் படத்தையே தாங்கி நின்றன.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் ரஷ்ய நாட்டின் பிரபல சிற்பியான ஜாமிலாவ் நளினியின் சிலையை வடிக்க அவளுடைய அனுமதியை வேண்டினான். நளினியின் கலையறிவும் அவளுடைய அங்க அசைவுகளில் வெளிப்பட்டுப் பிரகாசித்த உணர்ச்சி பாவங்களும் கலையுருவுக்கு அவள் ஒரு அபூர்வ மாதிரி என்று ஜாமிலாவ் மனதார நம்பினான். மயக்கமூட்டும் வகையில் இப்படிப் புகழ்ச்சி மண்டுவதை நளினியே எதிர் பார்க்கவில்லை.

ஜாமிலாவின் அறையில் தினமும் ஒரு மணி நேரம் அமர்ந்து அவன் சிலை வடிப்பதற்காகத் தோற்றமளிக்க ஒப்புக்கொண்டாள் நளினி. சிலை முடிந்தது. சிலை முடியும்வரையில் ஜாமிலாவும் நளினியும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை! ஆனால் சிலை முடிந்தவுடன் சிலையில் மிளிரும் கலையழகைப் பார்த்த நளினி பரவசமடைந்து, ஜாமிலாவின் கலைத் திறனைப் பாராட்டிக் கை குலுக்கினாள். ஜாமிலாவும் அவள் அழகையும் கலைத் திறனையும் பாராட்டி நன்றி தெரிவித்து விட்டு, அவளை விருந்துக்கு அழைத்தான். அவளும் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டாள். பிரபல அரசியல் தலைவர்களும் கலைஞர்களும் நளினிக்கு ஜாமிலாவ் அளித்த விருந்தில் கலந்து கொண்டனர்.

அதிலிருந்து ஜாமிலாவும் நளினியும் நெருங்கிய நண்பர்களாயிருந்தனர். ரஷ்யச் சிற்பி ஜாமிலாவிற்கும் இந்திய நாட்டிய அழகி நளினிக்கும் திருமணம் நடக்கப்போவதாகவும்,

※ 8-ம் பக்கம் பார்க்க

விற்பனையாகிறது!

'முரசொலி'யில் தொடர்கதையாகப் படித்தீர்கள்-

இப்போது திரை ஓவியமாகப் புத்தகத்தில் படியுங்கள்!

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணா : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும்.]

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712, : : சென்னை—6.

நீட்டோலை

மு. கருணாநிதி

இந்திரலோகப் பட்டு!

அன்புள்ள பொன்முடி!

எத்தன் ஒருவன், ஏமாளி மன்னன் ஒருவனிடம் சென்ருன்.

"ஈடு இணையற்ற வேந்தே! பல்வகை வளமும் நலனும் பெருகியிருப்பினும் தங்கட்குப் பகைவன் ஒருவனுல் விரைவில் முடிவு ஏற்படுமென்று ஊழ்வினை கூறுகிறது" எனக் கண்ணீர் மல்கக் கதறி நின்ருன்.

மரணச் சேதியால் மனமுடைந்த வேந்தன், விரோதியிடமிருந்து தப்பிட வழியே கிடையாதா என ஆவல் ததும்பக் கேட்டான். எத்தனே; இதுதான் சமயமெனத் தன் திட்டத்தை வெளியிட்டான்.

"பகையிடமிருந்து மீள பட்டு ஒன்று இருக்கிறது. அதை அணிவீராயின், அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையோடு அரண் உடைத்து அகழ் கடந்து அன்னியர்கள் உமை வளைத்திட்டாலும் உயிருக்கு ஆபத்தில்லை" என மொழிந்தான்.

'எங்கேயுளது அந்தப்பட்டு? என்ன விலை?' எனக் குதித்தான் கொற்றவன்.

"விலையோ ஒரு லட்சம் பொன்! அதன் இருப்பிடமோ இந்திரலோகம்!"—எத்தன் இவ்விதம் கூறினன்.

"இதோ தந்தேன் லட்சம் பொன்னை! காப்பாற்றிடு என்னை!"

"வருகிற பௌர்ணமியன்று பட்டோடு வந்து பார்க்கிறேன் பார்த்திபா!"

பவுன்களோடு போய்விட்டான் எத்தன்!

"இந்திரலோகம் எத்தனை காதமோ? அவன் எடுத்து வரும் பட்டு எவ்வளவு நீளமோ?"

எண்ணங்களை அலையவிட்டு முழு நிலவு வருகின்ற வானத்தை வணங்கி நின்ருன் முடியேந்தி! பிறை நிலவு பெரு நிலவாய் உருவெடுத்து ஒளி உமிழும் அந்நாளில் கொலு மன்றம் கூட்டி வைத்துப் பட்டு கொள்ளச் சென்றவனின் வருகைக்குக் காத்திருந்தான்; வந்து விட்டான் எத்தன் என்று வாயிற்காப்போர் சொன்னதுதான் தாமதம்; வழி நெடுக முரசறைந்து வரவேற்ருன் ஏமாளி மன்னன்!

எத்தன் வந்தான் வெறுங் கையோடு! "எங்கே பட்டு?" என்ருன் பார்த்திபன்! இதோ என்று சிமிழ் ஒன்றைத் திறந்து காட்டி, "எந்தன் மன்னு! ஈரேழு லோகங்களிலும் கிடைக்கவொண்ணு இந்தப் பட்டைப் பெறுவதற்கு எத்தனை நாள் இன்னலுற்றேன் தெரியுமா? இந்திரன் மனையாட்டி இந்திராணி உடுத்தியிருந்தாள் இந்தப் பட்டை! எட்டுச் சேலை உடுத்தினலும் கட்டுக்குலையா அவள் மேனி வெளியில் தெரியுமென்று தேவலோகமே வியக்கிறது வேந்தே; அத்துணை மெல்லிய ஆடைகள் அவைகள்! அவைகளில் மூன்ருவது அடுக்கிலேதான் இந்தப் பட்டை அணிந்திருந்தாள். இதை அபகரிக்க, இந்திராணி தோழியொருத்தி ஊர்வசிக்குத் தங்கையாம்—அவளைக் காதலித்தேன். காதலுக்கு விலையாக ஒரு லட்சம் பொன்னும் அளித்தேன். குளிப்பதற்கு இந்திராணி போன நேரம் பார்த்து இந்தப்பட்டுதனை எடுத்துவந்து எனக்குக் கொடுத்தாள். நான் உமக்குக் கொடுக்க ஓடிவந்தேன்."

—என்று வெறுங்கையால் முழம் போட்டு அளப்பதற்கு ஆரம்பம் செய்தான். சிமிழ் தனிலே பட்டுச் சேலையில்லை! அளக்கின்ருன் வெறுங் கையால்!

அதைக் கண்ட மன்னவன், எத்தனிடம் ஆத்திரமாய் "எங்கே பட்டு? எங்கேபட்டு?" எனக் கேட்டு வாள் நீட்டினுன்.

எத்தன் அரசனுக்கு அருகே சென்று "உண்மையில் உமது விழிகளுக்கு பட்டு தெரியவில்லையா? அரசே! ஒரு சேதி கேளும்! பத்தினிக்குப் பிறந்தவருக்கே இந்தப்பட்டு கண்ணுக்குத் தெரியும்! பரத்தைக்குப் பிறந்தால் பட்டு தெரியாது பார்வைக்கு; இப்போதும் கூறும்; பட்டு தெரிகிறதா?" எனக் கேட்டான்.

"தெரிகிறது தெரிகிறது—தெளிவாகத் தெரிகிறது!" எனக் கத்தினுன் காவலன்.

அருகிருந்த அமைச்சரிடம், "அமைச்சரே! உமது கண்ணுக்குத் தெரிகிறதா?" என்றும் கேட்டான்.

அமைச்சரும், "ஆகா, தெரிகிறது! எவ்வளவு அழகான பட்டு! என்ன மென்மை!" என்று பாராட்டினர். கொலு மண்டபத்தினர் அனைவருமே இந்திர லோகப் பட்டு பற்றிச் சிறப்புரை வழங்கினர். தெரியவில்லையென்ருல் தீயவளின் மக்களாகி விடுவோமோ என்ற பயம் அவர்களுக்கு! எத்தன் ஜெயித்து விட்டான்—ஏமாளி பொன்னிழந்தான்; அறிவிழந்தான்!

"இந்திர லோகப் பட்டு"—வேடிக்கைக் கதையாக சொல்லக் கேட்டிருக்கிருேம்; நீயும் நானும்! ஆனல், பொன்முடி; இன்று அரசியல் உலகில் உலவும் பலர் இந்திரலோகப்பட்டு காட்டிய எத்தனையும் மிஞ்சுகின்ற விதத்தில் நடந்துகொள்வதைக் காணும்போது எத்தனின் கதையும் உண்மையாக இருக்குமோ என்றுதான் தோன்றுகிறது.

மத்திய சர்க்கார் வரிகளைக் கண்டித்து இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள முற்போக்கு சக்திகளும், குறிப்பாகத் தென்னகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் குரலெழுப்பி வருகிறதல்லவா; அதை சமாளிக்கும் வகையில் ஆட்சியாளர் சார்பில் கூறப்படும சமாதானங்களில் தலையாயது; திட்டங்களின் வெற்றிக்காகவே வரி போடுகிருேம் என்பதாகும்!

திட்டம்-திட்டம்-என்று வாய் கிழியக் கத்துகிருர்களே; எங்கே திட்டம்? என்ன திட்டம்? என்று தேய்ந்து நிற்கும் தென்னகத்தைக் காட்டி அவர்களிடம் கேட்டால், "உங்கள் கண்ணுக்கு எமது திட்டமெல்லாம் தெரியாது; பரந்த நோக்கு படைத்த பாரத மாதா புத்திரர்களின் கண்களுக்கு மட்டுமே தெரியும்" என்ற ரீதியிலே பேசுகிருர்கள். அப்படி அவர்கள் பேசும்போதுதான் நண்பனே; இந்திர லோகப் பட்டு பற்றி விமர்சித்த எத்தனின் கதை ஞாபகம் வருகிறது! எத்தன் பொன்னை வாங்கி எதற்கோ செலவழித்து விட்டு, வெறுங் கையால் முழம் போட்டுக் காட்டினுன் இவர்களும் வரியை வசூலித்து வேறு செலவுகள் செய்து விட்டு எல்லாம் திட்டத்துக்காகவேதான் என்று கதைக்கிருர்கள்.

இந்த ஆண்டு வரி விதிப்பின் மூலம் மத்திய சர்க்கார் ஏறத்தாழ எழுபத்தைந்து கோடி ரூபாய் திரட்டலாம் என்று கூறப்படுகிறது. அந்த எழுபத்தைந்து கோடியும் திட்டத்துக்குச் செலவிடப்படுகிறதா என்று பார்த்தால்; எத்தன் எதிர் வந்து நிற்கிருன்.

வரியாக வசூலிக்கப்படும் எழுபத்தைந்து கோடியில் இந்த ஆண்டு அதிகப்படியான ராணுவச் செலவுக்காக ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிருர்களாம். உணவுப் பொருள்களின் விலைகள், புதிய வரிகளால் ஏறியிருப்பதை ஈடு கட்டி சமாளிக்க பலவிதங்களிலும் இருபத்தைந்து கோடி ரூபாயை செலவு செய்யப் போகிருர்களாம்.

சென்ற ஆண்டிலும், அதற்கு முதல் ஆண்டிலும ராணுவச் செலவை அதிகப்படுத்தியது போதாதென்று இந்த ஆண்டும் அதிகப்படுத்துகிருர்கள். இந்தியாவின் பாதுகாபபைப் பலப்படுத்துவதற்காக ஏழை மக்களின் ரத்தத்தை வரியாகப் பிழிந்து, அவர் தம் எலும்பு நரம்புகளையும் நிர்வாகச் செக்கில் போட்டு ஆட்டிக் கசக்கிப் பேழையை நிரப்புகிருர்கள்!

வரி கொடுத்து வாழ்விழந்து பிணக்காடாய் இந்தத் துணைக் கண்டம் மாறிவிட்ட பிறகு யாருக்காக பாதுகாப்பைப் பலப்படுத்தப் போகிருர்கள்? வரிக் கொடுமையால் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டு, வறுமைத் தேளால் கொட்டுண்டு வீழ்ந்து போன குடும்பங்களைக் கொண்ட இந்தத் துணைக் கண்டத்திற்குப் பாதுகாப்பை வலுப்படுத்து

காட்டூர் ஊராண்மைக் கழக புதிய பள்ளி கட்டிடத் திறப்பு விழா!

7—7—57 ஞாயிறு மாலை 5 மணிக்கு

காட்டூரில்

குடந்தை திரு. ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையில்

நடைபெறும்.

அறிஞர் அண்ணு

அவர்கள்

பள்ளிக்கூடத்தைத் திறந்து வைப்பார்கள்.

அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டும்.

கே. வி. ராமய்யா
நிதிக்குழு செயலாளர்,
ஊராண்மைக் கழகத் தலைவர்

மு. கருணாநிதி
கட்டிட நிதிக்குழுத் தலைவர்

திருவாரூரில் அண்ணா!

7-7-57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

திருவாரூரில்

அறிஞர் அண்ணா
மு. கருணாநிதி

ஆகியோர் பேசுவார்கள்

—தி. மு. க., திருவாரூர்.

வதும், சுடுகாட்டிற்கு வேலி அமைப்பதும் ஒன்றுதான்!

நேரு துரைமகனார் அகில உலக சமாதான நட்சத்திரம்! ஆண்டுக்கு அரைக்கால் மாதம் கூட சொந்த நாட்டில் இருப்பதில்லை. சூரியனைச் சுற்றும் பூமியைவிட வேகமாகச் சுற்றுகிறார் வெளிநாடுகளை! சென்ற இடமெல்லாம் சிறப்பு! ஐக்கிற்கும், டிட்டோவுக்கும், நாசருக்கும், குருஷேவுக்கும், மாசிடாங்குக்கும், சுகர்னோவுக்கும் சமாதான அரிச்சுவடியைக் கற்றுத் தந்தவரே அவர்தான் என்று, இந்தத் துணைக் கண்டம் புகழ்கிறது! அப்படிப்பட்ட சமாதானத் தூதுவர், தனது நாட்டில் ஆண்டுதோறும் ராணுவச் செலவை அதிகப்படுத்துகிறார். அந்தச் செலவுக்கு ஏழைகளின் முதுகில் வரிச் சுமையை ஏற்றி அவர்களின் எலும்பை ஒடித்தெறிகிறார்.

பாகிஸ்தான் அமெரிக்காவின் உதவி பெற்று இந்தியாமீது பாயுமானால் இந்தியா, இரஷ்யாவின் உதவிபெற்று அந்த எதிர்ப்பைச் சமாளிக்கும் என்றுதான் விஷயமுணர்ந்தோர் முடிவு கட்டுகிறார்களே தவிர, இந்தியா தன்னுடைய சொந்த ராணுவ பலத்தை மட்டுமே நம்பிப் போரில் இறங்கும் என்று யாரும் நினைத்திடஇடமில்லை.

சின்னஞ்சிறு எகிப்தை, பிரிட்டன் கசக்கிப் பிழிந்து எறிந்திருக்க முடியும். எகிப்துக்குப் பின்னே யார் யார் இருக்கிறார்கள் என்ற பீதியில்தானே பிரிட்டன் பின்வாங்கியது.

நாம் செலவழிப்பதைவிட எத்தனையோ ஆயிரம் மடங்கு அதிகமாக செலவழிக்கப்பட்டு வளர்ந்துள்ள போர்த் தளவாடங்கள் மேலைநாட்டாரிடம் இருக்கிறது என்பதை நேருவே ஒத்துக்கொள்கிறார். அந்த கைய நாடுகள் நம்மீது மோதுமேயானால் அதைச் சமாளிப்பது எவ்வாறு என்பதை நேரு அறியாதவருமல்ல. அறிந்தும் இந்த நெருக்கடியான நேரத்தில் ராணுவத்தின் அதிகச் செலவுக்காக இன்னும் ஐம்பது கோடியென்று வரிப் பணத்திலே எடுப்பதானது—அதற்காக வரிபோடுவதானது—நாட்டு நலனிலே அக்கரையுள்ளவர்களால் ஒப்புக்கொள்ளப்படக் கூடியது அல்ல.

ஆண்டு ஒன்றுக்கு இருநூற்றி ஐம்பது கோடி ரூபாய் செலவிடப்பட்டு வளர்க்கப்படும் ராணுவத்தின் பலம்தான் என்ன? கோவா—கொத்தமல்லிப் பாத்திபோல; அவ்வளவு சிறிய இடம்; அங்கே போர்ச்சுகீசியரின் வெறியாட்டம்! அதை அடக்கி ஒடுக்கி அவர்களை விரட்ட இந்த ராணுவத்தால் இயலவில்லை! காரணம் கோவாமீது இந்தியா படையெடுக்குமானால் உலக யுத்தத்திற்கான துவக்கம்கூட அங்கே தோன்றிவிடக் கூடும். "கோவா" ஒரு



சர்வதேசப் பிரச்சினையாகும் போது, இந்தியாமீது வேறொரு நாடு பாய்வதானது சாதாரணப் பிரச்சினையாகிவிடுமா?

கொரியாப் போர்—எவ்வளவு பயங்கரமான பின்னணியைக் கொண்டிருந்தது...!

இந்தச் சான்றுகளைக் காட்டி ராணுவமே தேவையில்லையென்று கூறவில்லை; அந்த ராணுவத்திற்கு தேவையற்ற விதமாக அதிகச் செலவு வேண்டியதில்லை யென்று குறிப்பிடுகிறேன்; அவ்வளவுதான்!

ராணுவத்தைப் பலப்படுத்தி உள் நாட்டிலே நாகர்களின் உரிமைக் கிளர்ச்சியையும், மராட்டிய மண்டிலத்து எழுச்சியையும், தென்னகத்தில் தோன்றக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிற விடுதலைப் போரையும் ஒடுக்கிவிடலாம் எனறு ராணுவச் செலவை அதிகப்படுத்துவோர் எண்ணலாம். அந்த எண்ணத்தோடு வளர்க்கப் படும் ராணுவம் தெனாலிராமனால் வளர்க்கப்பட்ட குதிரையைப் போலத்தான் இருக்கும்.

யாரும் வெல்ல முடியாத புரவியொன்று வளர்த்துத் தருகிறேன் என்று தெனாலிராமன் கூறி அரசரிடம் அதற்கான தீனிச் செலவுக்குப் பணமும் பெற்று வந்தானாம்.

வாரந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் அந்த அஸ்வத்திற்காக செலவழிக்கப்பட்டதாம். ஆனால் அந்த ரூபாய் குதிரை வளர்ப்புக்குப் பயன்படவில்லையாம். தினந்தோறும் குதிரைக்குத் தெனாலிராமன் தந்த தீனி ஒரு கொத்து புல் தானாம்! எப்படி இந்தியாவின் ராணுவச் செலவு பற்றியோ, லாப நஷ்ட கணக்குபற்றியோ, நிர்வாக ஊழல் பற்றியோ பேச்செடுக்க எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மன்றத்திலே வாய்ப்பு அளிப்பதில்லையோ அதுபோலவே தெனாலிராமன் குதிரை வளர்ப்பு பற்றியும் அரசாங்கத்தில் யாரும் வாய் திறக்க அனுமதிக்கப்படவில்லையாம்!

ஒருநாள் மன்னன், படைத் தளபதியை விட்டு தெனாலிராமன் வளர்த்த குதிரையைப் பரிசோதித்துவிட்டு வரச் சொன்னான். தளபதி தாடிக்காரன். அவன், குதிரைக் கொட்டடி பலகணி வழியே உள்ளே தலையை நீட்டிக் குதிரையைப் பார்த்தான். வழக்கம்போல புல் கொத்துதான் வருகிறதாக்குமென எண்ணிய குதிரை பசிக் கொடுமையால் தளபதியின் தாடியைப்பற்றி இழுத்தது.

தளபதி அலறி அடித்துத் தப்பித்தோம் பிழைத்தோமென அரண்மனைக்கு ஓடி, "அரசே! மிகமிக முரட்டுக்குதிரை! அதை யாரும் அடக்கிவிட முடியாது!" எனக் கதறினான். அந்த நிகழ்ச்சியால் தெனாலிராமனுக்கு நிறைய பரிசு கிடைத்தது. குதிரை வளர்த்த திறமைக்காக!

தெனாலிராமன் வளர்த்த குதிரை இளைத்திருந்தாலும், அந்த தேசத்துத் தளபதியைப் பயமுறுத்திப் பாராட்டுப் பெற்றது. அஃதேபோல் இந்திய ராணுவம் இளைத்திருப்பினும் நமது தேசத்து மக்களை அடக்குமுறைக்கு ஆளாக்கி—நாகர்களை நசுக்கி—பாராட்டுதலைப் பெறுகிறது!

உண்மை என்னவெனில், தெனாலிராமனைப் போலவே ஊழல் செலவுகள் பெருகி விட்டன; வாங்குகிற பணம், திரட்டுகிற வரி, ஒழுங்காக செலவழிக்கப்படுவதில்லை. ஒரே ஊழல்! எங்கும் ஊழல்! தேசமோ பாதுகாப்பில் மட்டுமல்ல; எல்லா வகையிலும் தெனாலியின் புரவியைப் போலவே காட்சி தருகிறது.

இவ்வளவையும் மறைக்க "திட்டம்" என்ற ஒரு சொல்லைக் காட்டுகிறார்கள்! அதையும் பார்ப்போம் என்றால் "அது இந்திரலோகத்துப் பட்டு! உங்கள் கண்ணுக்குத் தெரியாது!" என்கிறார்கள்.

என் சொல்வது; ஏமாளிகள் இருக்கும்வரை எத்தர்களும் இருக்கத்தான் செய்வார்கள்!

அன்புள்ள,

நண்பன்.

திருமண அழைப்பு

மணமக்கள் :

மா. கந்தசாமி — நல்லம்மாள்

மணவிழா நிகழுமிடம்:

குளித்தலை வட்டத்தைச் சேர்ந்த
பணிக்கம்பட்டி — மணமகன் இல்லம்

நாள் :

30—6—57 ஞாயிறு காலை 9-மணி அளவில்

விழாத் தலைவர் : **மு. கருணாநிதி**

பிறைவானம் . . .

※ 11-ம் பக்கத் தொடர்ச்சி

"அப்புறம்?"

"அப்புறமென்ன; மாண்டு போன பையனின் உடலில் உயிரைப் புகுத்தியது பேய்! பையன் உயிர் பிழைத்து எழுந்து விட்டான்! முதலில் என் காலில்தான் விழுந்தான். இப்போது அந்தப் பையன் எங்கிருக்கிருன் தெரியுமா? துறவியாக நாடெல்லாம் சுற்றுகிருன்...அதோ, இப்போது அவன் பக்தி நிறைந்த மனக் கண் எதைக் கண்டு ரசித்துக் கொண்டிருக்கிறது தெரியுமா? கைலாசத்திலே......"

"என்ன; கைலாசத்திலேயா?"

"ஆமாம்; கைலயங்கிரியிலே பார்வதி தேவியார் ஒரு புறமும், ரதி தேவியார் மறுபுறத்திலும் சேர்ந்து ஆட எம்பெருமான் யமதேவன் நடனமாடும் கண்கொள்ளாக் காட்சியைத்தான் கண்டு களித்துக் கொண்டிருக்கிருன்...... ஹரே நாராயணு!...நாராயணு...!"

"என்னங்க இது...?"

"தம்பி, எனக்கு ரொம்ப ரொம்ப முக்கியமான வேலை இருக்கு! உனக்குத் தெரியுமா, ஔவையாரை மிரட்டிச்சே ஒரு பேய்; அதை உடனே 'மீட்' செய்து ஒரு 'என்கேஜ்மெண்ட்' கொடுத்தாக வேண்டும்...!"

"ம்...?"

"ஆமாம் தம்பி, நேற்று இரவு பறக்கும் தட்டிலே அமெரிக்காவிலிருந்து வந்து சொல்லிட்டுப் போனுரே ஸ்டாலின்..."

"என்ன?..."

"ஆமாம்; இந்த மகாத்மா காந்தியாலேதான் உலகத்திலே அமைதியே கெடுது; அவரை எப்படியாவது அந்தப் பேயை விட்டுத் தீர்த்துடணும்னு அவர் சொல்லிவிட்டு ரஷ்யாவுக்குப் போயிட்டாரு, ஐசன்ஹோவரைப் பார்க்க!..."

"ஐயையோ!..."

"ஐசனேவருன்னவுடனே ஏன் பயப்படுறே? அட, ஏன் எழுந்திருக்கிறே தம்பி? அவர் 'ஹைடரஜன் பாம்' வச்சிருக்காரேன்னு; அட முட்டாளே! அந்த பாம் எனக்கிட்ட மட்டும் இல்லையா என்ன? வேறு எதுக்கு நான் வீடு கேட்கிறேன்; 'ஆக்சிஜன் பாமே' நான் தயார் செய்யப் போறேன்..."

"ஐயையோ!..."

"என்ன தம்பி எழுந்திருச்சுட்டே? சும்மா உட்கார்! அரசமரத்துப் பேயை வரச் சொல்லி யிருக்கேன்; அதன் முதுகிலே ஏறிக்கிட்டு வீட்டுக்குப் போகலாம்..."

"ஐயையோ!..."

"பின்னே சொர்க்கத்துக்குப் போகலாமா?"!

"வேண்டாம்; வேண்டாம்!..."

"என்னடாவேண்டாங்கிறே?... அப்ப நரகத்துக்காவது போவோம்! ஏ, பிரியமுள்ள பூதமே!...நீ உடனே...டேய், டேய் தம்பி! எங்கேடா ஓடுறே? ஏய், ஏய்..."

"................"

"சீ,சீ! பைத்தியக்காரப்புள்ளே! ஓடியேப் போயிட்டான்; ஐயோ, பைத்தியமே! பைத்தியமே!"

—சொர்ணம்.

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், 7-7-57 ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கொள்கிறேம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால் அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக் கொள்கிறேம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிருர்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும் வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிருர்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன் கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்து விடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
போதுச் செயலாளர், தி. மு. க.

இதுதான் கலாச்சாரம் . . .

※ 5-ம் பக்கத் தொடர்ச்சி

நளினி சீக்கிரமே ரஷ்ய நாட்டுப் பிரஜையாக உரிமை கோரப்போவதாகவும் ரஷ்யப் பத்திரிகைகள் ஹேஷ்யம் கிளப்பின. நளினியோ, ஜாமிலாவோ வதந்திகளை மறுக்கவில்லை.

சீக்கிரமே இந்தியக் கலாச்சாரத் தூதுக் குழு, நளினி உட்பட இந்தியாவிற்கு விமானத்தில் புறப்பட்டது!

* * *

கலாச்சாரத் தூதுக் குழுவில் சென்ற பிரபல கவிஞர்—தூதுக் குழுவின் தலைவர்—சென் இந்தியா திரும்பியவுடன், உடல் நலம் குன்றிப்போனர். அவர் யாருடனும், மனைவி சுபத்ராவிடம்கூட பேசுவதைக் குறைத்துக் கொண்டார். அடிக்கடி தனியாக அறையில் அமர்ந்து ஏதோ எழுதி எழுதிக் கிழித்துப் போட்டுக்கொண்டே இருந்தார். அவருடைய செய்கை அவருடைய மனைவிக்குப் பெரும் புதிராகவே இருந்தது ஒரு நாள் அவர் தூங்கிக் கொண்டிருந்த சமயம் அவருடைய மேஜையை சோதனை போட்டுப்பார்த்தாள் சுபத்ரா. அவருடைய கையாலேயே எழுதப்பட்ட காதல் கவிதைகள் அவைகள். எல்லாம் நளினியின் அழகைப் பற்றியும், நளினி அவள் கணவன் ரஞ்சனுக்குத் துரோகம் செய்ததோடு மட்டுமின்றி, அவரை (சென்) காதலித்து, பிறகு அவரையும் ஏமாற்றி ஜாமிலாவோடு ஒழுங்கற்று வாழ்ந்ததையும் சுவை மிக்கக் காவியமாக்கியிருந்தார்.

சுபத்ராவின் தலை கிறுகிறுத்தது. பயன்படாத சென்னின் அமர காவியத்தைப் பத்திரமாக மடித்து வைத்துக்கொண்டாள்.

* * *

அன்று பம்பாய் கடற்கரை என்றுமில்லாத அழகோடு காட்சியளித்தது. ஆனுல் அமைதியான கடலைக் கேலி செய்வதுபோல் சுபத்ராவின் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. சற்று தூரத்தில் நளினியின் கணவன் ரஞ்சன் மட்டும் தனியாகக் காரில் வீற்றிருந்தார். சுபத்ரா அவரைப் பார்த்தவுடன் சற்று மன ஆறுதலோடு அவரை நோக்கிச் சென்ருள்.

"சுபத்ரா!" — குழைவோடு அவளை அழைத்தபடியே காரிலிருந்து இறங்கினுர்.

"ஏன், நளினி உங்களோடு வரவில்லையா?"—சுபத்ரா கேட்டாள்.

"இப்பொழுதெல்லாம்—ரஷ்யா போய் வந்த பிறகு—என்னுடன் இருப்பதைக் கூடுமானவரை தவிர்க்க முயல்கிருள். அதிருக்கட்டும். உங்களுடைய கணவர் சென் எங்கே?"

"அவரா? ரஷ்யா போய் வந்த பிறகு அவருக்கு மூளைக் குழப்பமே ஏற்பட்டு விட்டது. டாக்டர், சேனடோரியத்தில் அவர் குறைந்தது இரண்டாண்டு காலமாவது இருக்க வேண்டுமென்று கூறி விட்டார்!"

"காரணம்?"

"காரணமா...? இதோ, என் கணவர் எழுதிய இந்தக்கவிதைகளைப் படியுங்கள். எத்தனையோ புரியாத புதிர்களுக்கு விளக்கம் கிடைக்கும்."

அவர் கைகளில் கொண்டு வந்திருந்த காகிதக் கட்டைத் திணித்து விட்டு, வேகமாக அங்கிருந்து நடந்தாள் சுபத்ரா.

* * *

இரண்டொரு வாரங் கழித்துப் பத்திரிகைகளில் இரண்டு சுவை மிக்க செய்திகள் வெளியாகியிருந்தன. ஒன்று:

பிரபல நாட்டிய மேதை நளினி அவருடைய கணவன் ரஞ்சனிடமிருந்து விவாகரத்து கோரியிருக்கிறர். காரணம், புகழ் பெற்ற ரஷ்ய சிற்பி ஜாமிலாவை அவர் திருமணம் செய்துகொள்ள விரும்புவதுதான். ஸ்ரீமதி நளினி கலாச்சாரத் தூதுக் குழுவில் ரஷ்யா சென்றிருந்தபொழுது ஜாமிலாவ் அவருடைய சிலையைச் செய்ததும், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலிப்பதாகப் பத்திரிகையில் செய்திகள் வந்ததும் வாசகர்கள் அறிந்ததே! நளினியின் கணவர் ரஞ்சனும் விவாகரத்துக் கோரிக்கையை ஆட்சேபிக்கவில்லை என்று தெரிகிறது.

மற்ருெரு செய்தி:

அரசாங்க விருதுகள் பெற்ற கவிஞர் சென் சித்த சுவாதீனமற்றிருப்பதால் அவருடைய மனைவி சுபத்ரா விவாகரத்து கோரியிருப்பதை சட்ட பூர்வமாக அனுமதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

* * *

சில வாரங்களுக்குப் பிறகு வெளியான ஜாமிலாவ்—நளினி திருமணச் செய்தி யாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தவில்லை. இந்தத் திருமணம் இரஷ்ய—இந்தியா கலாச்சார உறவை அறுக்க முடியாதபடி உறுதிப்படுத்தி விட்டதாக பத்திரிகைகள் பாராட்டின!

ஆச்சரியப்படத் தக்கத் திருமணச் செய்தியொன்றும் வெளியாகியது. அதுதான் நளினியின் மாஜி கணவர் ரஞ்சனுக்கும், செனனுடைய மாஜி மனைவி சுபத்ராவுக்கும் நடந்த திருமணம்!

என்ன விழிக்கிறீர்கள்? கவிஞர் சென் என்ன ஆனுர் என்று தானே கேட்கிறீர்கள்? பாவம், அவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நாடுகளுக்கிடையே ஏற்படவேண்டிய கலாச்சார நல்லுறவுபற்றிக் கவிதைகள் எழுதிக் காற்றில் பறக்க விட்டுக் கொண்டிருப்பதாகக் கேள்வி!

●●●

ஒரு லட்சம் பாழ்! பாழ்!!
உணர்வார்களா ஊராள்வோர்?

ரேஷன் காலத்திலே நடை பெற்ற பிரபலஸ்தர்கள் வீட்டுக் கல்யாணங்கள் நினைவிருக்கலாம்.

நாற்பது அல்லது ஐம்பது இலைகள்தான் கணக்கில் காட்டப்பட வேண்டும்—என்று ரேஷன் ஆபீசர் உத்தரவிட்டிருப்பார்.

ஆனால் 'பிரமுகர்' வீட்டுத் திருமணமாயிற்றே! விருந்தினர்கள் குறைவாகவா வருவார்கள்?

வழக்கம்போல் நூற்றுக் கணக்கானவர் சாப்பிடுவார்கள்! மார்க்கெட்டிலே எங்கும் கிடைக்காத அரிசி அவர்களுக்குத் தாராளமாகக் கிடைக்கும்!

புழுதிபோல் சாக்கடை மணத்துடன் வெளி உலகிலே ஏழைபாழைகள் அரிசி வாங்கி உண்பர்—ஆனால் 'பெரிய மனிதர்' வீட்டுத் திருமணத்திலோ முல்லை நிறங்கொண்ட நல்ல அரிசி நடமாடும்!

நாற்பது இலைகளுக்குத்தான் அனுமதி; இருந்தாலும் நானூறுக்கு மேற்பட்டோர் ஒருபந்தியிலே சாப்பிட்டிருப்பர்; இன்னும் பல பந்திகள் நடைபெற இருக்கும்!

இருந்தாலும் ரேஷனிங் ஆபீசரின் உத்தரவு என்னாவது?

ஆபீசர் நாற்பது இலைகளுக்குத்தானே அனுமதி தந்திருந்தார்?

எனவே திருமணத்தை நடத்திய அந்தப் பெரிய மனிதர் நாற்பதே நாற்பது இலைகளை மாத்திரம் தெருவோரத்திலே போடுவார்.

மீதமுள்ள நூற்றுக் கணக்கான இலைகள் நகருக்கு அப்பால் அனுப்பப்பட்டு; ஆழக் குழிதோண்டி; யார் கண்ணுக்கும் படாமல் மூடப்பட்டு விடும்!

—ஆக உலகத்தின் கண்களுக்கு—அல்ல; அல்ல—ரேஷனிங் ஆபீசர் கண்களுக்கு நாற்பது பேரே திருமண விருந்தில் சாப்பிட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டுவிடும்!

—இந்த நிகழ்ச்சி அநேகமாக எல்லோருக்கும் நினைவிருக்கலாம். பலர் இது போன்ற 'இலை' நாடகத்தையே நடத்தியிருப்பர்!

—இப்போதைய இந்திய அரசியலில் இதுபோன்றதொரு நாடகம்தான் நடைபெற்று வருகிறது!

சிக்கனம்!

சிக்கனம்!

—அமைச்சர் முதல் சாதாரண காந்திக் குல்லாய் தரித்திருப்பவர்வரை இதையேதான் பேசுகின்றனர்!

சம்பளக் குறைப்பு!

உல்லாசச் செலவுகள் தடுப்பு—இவை போன்றவைகள் மூலம் அனாவசியச் செலவுகள் அனைத்தும் அறவே குறைக்கப்பட்டு—நீக்கப்பட்டு விட்டதாக பொது மக்கள் மனதிலே ஒரு கற்பனையை—கட்டுக் கதையை—ஏற்படுத்தியிருக்கிறார்கள்!

வழக்கம்போல் நானூறு பேர்கள்; நான்குக்கு மேற்பட்ட பந்திகள் — இப்படி விருந்துபசாரம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது!

ஆனால் ஒரு வேறுபாடு—முன்பெல்லாம் அத்தனை இலைகளையும் வீண் 'கௌரவத்திற்காக வாவது தெரு வோரத்தில் குவித்து; 'பார்; பார்: இத்தனை ஆயிரம் பேர்கள் என் வீட்டுக் கல்யாணத்திலே விருந்து சாப்பிட்டிருக்கிறார்கள்'—என்று பக்கத்து வீட்டுக்காரனுக்கும் எதிர்த்த வீட்டுக்காரனுக்கும் எடுத்துக் காட்டுவதைப் போல் ஒரு காட்சியை அமைத்துக் காட்டுவார்கள்!

இப்போதோ அதிக வரி செலுத்தித் தீரவேண்டிய கட்டாய நிலைமையிலிருக்கிற பொது மக்கள் என்கிற ரேஷனிங் ஆபீசர் விழித்துக் கொண்டிருக்கிறார்; ஊதாரித்தனமாக அவசியப் பொருள்களை வீணாக்காதே என்று கண்டிப்புக் குரல் கொடுக்கிறார்!

எனவேதான் நிலைமையிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது!

பத்தாயிரம் இலைகள்; இருபதினாயிரம் இலைகள்: பாலும் வெண்ணெயும் வழிந்தோடிய தலைவாழை இலைகள்—என்று முன்பு பகட்டு பேசினர்!

இப்போதோ அந்த ஆடம்பர ராகத்தை சிக்கன ராகமாக மாற்றிக் கொண்டு, "நாற்பதே இலைகள்தான் பார்த்தீர்களா! எவ்வளவு பொறுப்புணர்ச்சி! எவ்வளவு கடமையுணர்ச்சி" என்று பொது மக்கள் பால் பாடிக் காட்டுகிறார்கள்!

ஏனெனில் உண்மையிலேயே செலவுகளை—வீண் ஆடம்பரச் செலவுகளை—இந்த அரசாங்கம் குறைத்துக் கொள்ள விரும்பினால் குறைக்க வேண்டிய முக்கிய செலவினங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன!

முதலமைச்சர் பண்டித நேருவும் அவரது சகாக்களும் பத்து சதவீதம் தங்களது சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

பத்து சத வீதச் சம்பளக் குறைவினால்சிதைந்துபோயிருக்கும் இந்தியப் பொருளாதாரத்திற்குப் புத்துயிர் கிடைத்து விடுமா?

அதுவொன்றே போதுமா; இதர துறைகளில் பொது மக்களின் வரிப்பணம் வீணாகாது—என்பதற்கு உறுதியளிக்க?

இல்லை; அப்படி யொன்றும் இதுவரை தெரியவில்லை.

ஆட்சியாளர்கள் முழுமூச்சுடன் சிக்கனத்திற்குக் கவலைப்பட்டிருந்தால் வீண் செலவு நடைபெற்று வருகிற அரசாங்கத்தின் இதர செலவினங்களிலே அவர்கள் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்!

ஆனால் இன்றுவரை அவர்களது போக்கு இந்திய அரசியலில் அதிகப்படியான வரிச் சுமையை மறைக்க மீண்டுமொரு நாடகம் 'சிக்கனம்' என்ற பெயரிலே நடத்தி வருவதுதான்—என்கிற நமது கருத்துத்தான் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது!

★★★ சென்ற கிழமை பண்டித நேரு லண்டனில் நடைபெற்று வரும் காமன் வெல்த் மாநாட்டிலே கலந்து கொள்வதற்காக லண்டனுக்குப் பயணமானார் அல்லவா?

அவர் நேராக லண்டன் செல்லவில்லை. இதுவரை அவர் அப்படிச் சென்றதுமில்லை.

ஒவ்வொரு முறை காமன் வெல்த் மாநாட்டிற்குச் செல்வதை யெல்லாம் அவர் ஒரு பெரிய ஐரோப்பியச் சுற்றுப் பயணத்திற்கே பயன்படுத்தி வருகிறார்!

அதைப் போலவே இந்த முறையும் லண்டன் மாநாட்டிற்கு முன்னதாகவே புறப்பட்டு நார்வே, ஸ்வீடன், டென்மார்க் முதலிய ஸ்காண்டிநேவிய நாடுகளுக்கும் 'விஜயம்' செய்திருந்தார், ஆகாய விமானம் மூலம்!

பண்டிதர் தனது குழுவினருடன் குறிப்பிட்ட தினத்தில் ஆகாய விமானத்தின் மூலம் புறப்பட்டார்!

ஆனால் பிரதமர் புறப்படுவதற்கு சில நாட்கள் முன்னதாக வேறொரு ஆகாய விமானம்—வேறு முக்கிய ஆட்களை இல்லாத காலி விமானம்—பண்டிதர் செல்லக்கூடிய இடங்களுக்கெல்லாம் சென்று வந்திருக்கிறது!

"பிரதமர் பிரயாணம் செய்யும் போது சரியான ஆகாய விமானக் கூடத்திற்குச் சரியான நேரத்தில் சேருவதற்காகத்தான் இந்த ஒத்திகை"—என்று பதில் அளிக்கப்படுகிறது!

ஆனால் ஆளில்லாத இந்த ஒத்திகை விமானத்திற்காக இந்திய அரசாங்கம் செலவழித்திருக்கும் தொகை எவ்வளவு தெரியுமா?

சுமார் ஒரு லட்சம் ரூபாய்கள் ஆகியிருக்கும்—என்று கூறுகிறது பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' ஏடு!

—சரியான கணக்கு விபரம் இன்னும் தெரியவில்லை: அதனால் நிச்சயம் அந்த ஒத்திகைச் செலவு ஒரு லட்சத்திற்குக் குறைவிருக்காதாம்!

—சிக்கனம் பேசி, சிறிய வீட்டிற்குக் குடிபோகும் திட்டமும்; பத்து சதவீதச் சம்பளக் குறைப்பும் நடந்து வருகிற இந்த நேரத்திலே ஒரு லட்சம் ரூபாய் ஒத்திகை விமானத்தின் செலவிற்காக வீண்!—என்ற செய்தியும் உடன் வருகிறது!

இந்த வரி விதிப்பிற்கு முன்பு இந்தத் தகவல் வெளியாகியிருந்தால் காந்திக் குல்லாய் தரித்தவர்கள் என்ன தெரியுமா சொல்லியிருப்பார்கள்?

தனவந்தன் தனது வீட்டுத் திருமண விருந்தில் பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் பேர்கள் சாப்பிட்டதாகப் பெருமை பட்டுக் கொள்வதைப்போல. "பார்த்தீரா எமது பண்டிதரை! அவர் புறப்படுகிறார் என்றால் அவருக்கு முன்பாக இன்னொரு விமானம் வழியறிந்து கூற சென்று வந்திருக்கிறது. யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்? யாரால் முடியும் இந்த மரியாதையைப் பெற? எலிசபெத் ராணியாருக்கும்; மற்ற வல்லரசுத் தலைவர்களுக்கும்; உலகத்தின் பெரும் புள்ளிகளுக்கும்கிடைக்கின்ற வாய்ப்பல்லவா—கௌரமல்லவா எங்கள் தலைவருக்குக் கிடைத்திருக்கிறது!" என்று கூறிப் பெருமைப்படுவார்கள்!

—ஆனால் இப்போது இப்படிச் சொல்லிக்கொள்ள அவர்களே வெட்கப்பட வேண்டும்!

ஏனெனில் ஒத்திகை விமானத்திற்காக ஒருலட்சம் ரூபாய் செலவு என்பதற்கு பொது மக்கள் வரிப் பணம் ஒரு லட்சம் ரூபாய் பாழ் செய்யப்பட்டிருப்பதாகப் பொருள்!

சிக்கனம்; சிக்கனம் என்று கூறிக் கொண்டு இப்படியெல்லாம் பெருஞ் செலவு செய்து கொண்டிருப்பது நாற்பது இலைகளைக் காட்டி நாற்பது பேருக்குச் சாப்பாடு போட்டதாகக் கணக்கு காட்டிவிட்டு; நாலாயிரம் பேருக்குச் சாப்பாடு போட்ட 'சமுதாயத் துரோகி'யின் கதையாகத்தான் இருக்க முடியும்!

முரசொலி சந்தா விபரம்

உள் நாடு	வெளி நாடு
ஆண்டு சந்தா 6—50	ஆண்டு சந்தா 7—50
ஆறு மாதம் 4—00	ஆறு மாதம் 4—50

[illegible] உரையாடல்

★ தந்தையும் மகனும் ★

தந்தை: என்னடா செய்து கொண்டிருக்கிறாய்? அந்தத் திருக்குறளை யாவது படியேண்டா!

மகன்: ஏதாவது புரிந்தாலல்லவா, நான் படிப்பதற்கு? நீங்கதான் பரிமேலழகர் உரையை வாங்கி வந்திருக்கிறீர்களே! அவர் உரைக்கு ஒரு உரை யாராவது போட்டிருந்தால் அதை வாங்கி வந்தால்தான் 'திருக்குறளைப் புரிந்து கொள்ள முடியும்!

தந்தை: என்னடா புரியவில்லை? எங்கே இங்கே கொண்டுவா! (மகன் திருக்குறளை எடுத்து வருகிறான்.) நேற்று எந்தெந்த குறட்பாக்களைப் படித்தாய்?

மகன்:

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்ற குறளையும்,

"ஈன்ற பொழுதிற்பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

என்ற குறளையும் படித்தேன். இன்று அதற்கடுத்த குறளைப் படிக்க வேண்டும்.

தந்தை: சரி! மன்னுயிர்க் கெல்லாம் இனியது எது?

மகன்: நான் தங்களைவிட அறிவுடையவனாக விளங்குவது' தான்!

தந்தை: அதுதான் இப்படி வடிகட்டிய முட்டாளாக விளங்குகிறாய் போலும்! அது தொலையட்டும். அடுத்த குறள்தான் மிகமிக முக்கியமான குறள். மகன், தந்தைக்கு செய்ய வேண்டிய கடமை என்னவென்பதை விளக்குகிறது. நீ சிறந்த அறிஞனாக விளங்க வேண்டும். நாட்டிற்கு நன்மைகள் பலப்பல செய்ய வேண்டும். நீ சாலையிலே போய்க்கொண்டிருப்பதைப் பார்த்த அறிஞர்கள், பெரியவர்கள், "இதோ போகிறானே, இவன் இன்னாருடைய மகன்! இவனைப் போலல்லவா பிள்ளையிருக்க வேண்டும்! இவனைப் பெற இவன் தந்தை என்ன நன்மை செய்தானோ?' என்று பேசிக் கொள்ள வேண்டும். உன்னை அப்படி எல்லோரும் புகழ்ந்தால்—நீ அப்படி எல்லோராலும் புகழப்படும் வகையில் வாழ்ந்தால்—அதுவே நீ எனக்கு செய்யும் தலைச்சிறந்த கடமை!

மகன்: அப்பா! ஒரு சிறு சந்தேகம். கேட்கட்டுமா? கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?

தந்தை: என்ன சந்தேகம்? தாராளமாகக் கேள்!

மகன்: அப்பா! நீங்கள் சென்ற வாரம் பொதுக்கூட்டத்திலே பேசும் போது "இந்தத் தி.மு.க. வினர்களுக்கெல்லாம் தந்தை பெரியார்தான் தந்தை! அதை தி.மு.க.வினரே ஒப்புக் கொள்ளுகிறார்கள்!" என்று பேசினீர்களே!

தந்தை: ஆம்! அதிலென்ன சந்தேகம்? ஈ. வெ. ரா.தான் தி. மு. க.வினரின் தந்தை!

மகன்: அப்படியானால் தி.மு.க.வினர் ஈ. வெ. ரா. வின் பிள்ளைகள். இல்லையா?

தந்தை: ஆம்!

மகன்: இப்பொழுது எல்லோரும் தி. மு. க. வினரைப் பாராட்டுகிறார்கள். பிற கட்சிக்காரர்கள்கூட. "நேற்று அசெம்பிளியில் என்ன அழகாக அண்ணாதுரை பேசினார்! அன்பழகன் பேச்சு ஈடு இணையற்றது! கருணாநிதியின் பேச்சு கேட்டார் பிணிக்கும் பேச்சு!" என்றெல்லாம் புகழ்கிறார்களே! வடநாட்டுப் பத்திரிகைகள்கூடப் புகழ்ந்திருக்கின்றனவே! அப்படியானால் தி.மு.க.வினர் தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டார்கள் என்பதுதானே பொருள்!

தந்தை: சீ! கழுதை! பெரிய வியாக்கியானம் செய்கிறாயோ! தி. மு. க. வினர் செய்கிற சூழ்ச்சி உனக்கென்னடா தெரியும்? தந்தையை விட்டுப் பிரிந்து தனிக்கட்சி ஆரம்பித்து எங்கள் கழகத்தையே அழிக்கப் பார்க்கிறார்களே! இதுதான் அவர்கள் செய்யும் கடமையோ?

மகன்: என்னவோ அப்பா! வள்ளுவர் கூறுகிற கடமைகளை அவர்கள் நிறைவேற்றி விட்டார்கள்! அது போகட்டும் "அவை" என்றால் எதைக் குறிக்கும்? நம் சென்னை அசெம்பிளி, டெல்லி லோகசபை எல்லாம் அவைகள் தானே!

தந்தை: ஆம்! அவைகள் நம் நாட்டின் 'அவைகள்'!

மகன்: அப்படியானால் தந்தை மகனுக்கு செய்ய வேண்டிய கடமை யாது?

தந்தை: நான் செய்ய வேண்டிய கடமைதானே! உன்னைப் படிக்க வைத்து அறிஞனாக்குவது! பிறகு உனக்கு வேலை வாங்கிக் கொடுத்து விட்டால் சரி! அவ்வளவுதான்!

மகன்: சரி! தந்தை, மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையாக வள்ளுவர் கூறுவதைப் பார்ப்போம்! மகனைப் பெரியோர்கள் அவையின் கண் யாவர்க்கும்முன்பு தலைவனாக வீற்றிருக்கச் செய்ய வேண்டும்! இதைத்தான் வள்ளுவரும்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

எனக் கூறுகிறார். இல்லையா?

தந்தை: சரி! அதற்காக என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? நான், உன்னை அசெம்பிளிக்கு நிறுத்தி வைத்து எம். எல். ஏ. ஆக்கவில்லை என்கிறாயா?

மகன்: இல்லையப்பா! என்னைப் பற்றி நான் கேட்கவில்லை! உங்கள் தந்தை பெரியார், தன் பிள்ளைகளாகிய தி. மு. க. வினரை—அதுவும் தந்தைக்கு வேண்டிய கடமையைத் தவறாமல் செய்து வரும் தி. மு. க. வினரை—அசெம்பிளிக்குத்தானே நிறுத்தி வைத்து எம். எல். ஏ. ஆக்கி மகிழ்ச்சி அடைய வேண்டும்! அட, அதுதான் போகட்டும்; தன் கடமையை மறந்ததோடல்லாமல், அவர்கள் நிற்குமிடமெல்லாம் போய் இல்லாததையும் பொல்லாததையும் கூறி அவர்களைத் தோற்கடிக்க வேண்டுமென்று என்ன பாடுபட்டார்! கடைசியில் இரத்தக் கொதிப்பு வரும்வரை, "இந்தத் தி. மு. க. வினரை விட்டேனா பார்!" என ஒற்றைக் காலில் நின்றாரே! இதுதான் தந்தையின் கடமையா?

தந்தை: (கோபமாக) ஊம்... பேசடா! பேசு! ஏண்டா நிறுத்திவிட்டாயே! சும்மா பேசடா! என்னடா என்கிட்டேயே உன் பிரசங்கத்தை ஆரம்பித்து விட்டாய்! ஏலே, உங்களையெல்லாம் இப்படிப் பேசவைத்தவர்கூட எங்கள் தந்தைதானடா! அதை மறந்துவிட்டுப் பேசாதீங்கடா!

மகன்: என்னமோ அப்பா! ஈ. வெ. ரா. செய்தது அநியாயத்திலும் அநியாயம்! தன் கடமைகளைச் சரியாக செய்து வரும் மகனைத் துரோகி எனத் தூற்றி அவனை வாழ்க்கையில் முன்னேற விடாமல் முட்டுக்கட்டை போடும் வஞ்சக நெஞ்சு படைத்த தந்தைகளும் இருப்பார்கள் என்ற எண்ணத்தினால்தான் வள்ளுவர் "தந்தையின் கடமை"யைக் குறிக்கும் குறளையும், 'மகனின் கடமை'யைக்குறிக்கும் குறளையும், ஒரே அதிகாரத்தில் ஒன்றினருகில் ஒன்றாக வைத்திருக்கிறார் போலும்!

தந்தை: டேய், நிறுத்துடா! என்னடா தலைக்கு மேலே பேசிக்கொண்டே போகிறாய்! வஞ்சகநெஞ்சம் யாருக்குடா? நேற்று அந்த தி. மு. க. கூட்டத்திற்குப் போனியாடா? உள்ளதைச் சொல்லு!

[கோபமாக மகனை அடிக்கப் போகிறார்.]

—சோ. ஆனந்தன் பி. எஸ்ஸி.,

❊ 4-ம் பக்கத் தொடர்ச்சி

வந்து சேராத கடிதத்திற்கு விவரமான—விளக்கமான பதில் எழுத நேரம் கிடைத்திருக்கிறது!

ஏன்? முன்பு என். ஜி. ஓ.த் தலைவர்களோடு சில விநாடிகள்கூட பேசமுடியாத அளவுக்கு பண்டிதருக்கு இருந்த அலுவல்கள் இப்போது பல பக்கங்கள் கடிதம் எழுத நேர்ந்த இந்த நேரத்தில் எங்கு சென்று மறைந்தன? இப்போது மட்டும் எப்படி அவரால் ஆத்மானந்த்ஜிக்கு அழகான பதில் எழுத அவகாசம் கிடைத்தது?

இதுமட்டுமல்ல; இன்னும் பல கேள்விகள் நம்மைக் குடைகின்றன:

சாகும் நிலையிலிருந்த பொட்டி சீராமுலுவை; சங்கரலிங்கத்தை உயிர் மீட்கச் செய்வதற்கு ஒரு வரி எழுதிக் கேட்டுக் கொள்ளாத பாரதத்தின் பிரதமர் ஒரு சில ஆண்டிப் பண்டாரங்களுக்குப் பரிந்து கொண்டு அவர்கள் தலைவருக்குக் கடிதம் எழுதுவானேன்?

தமிழகத்திலே காங்கிரசுக்கு அடுத்த மாபெரும் அரசியல் கட்சியின் பெயரைக் கூட நினைவு வைத்துக்கொள்ளாததுபோல் அலட்சியமாக நினைத்து நடித்துக் காட்டிய பண்டிதர்; பஞ்சாபிலே நடக்கும் ஒரு சிறு பூசலுக்குப் பரிந்துகொண்டு இவ்வளவு தூரம் சம்மந்தமில்லாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கடிதம் தீட்டுவானேன்?

—இவைகளுக்கெல்லாம் காரணம் தேட நாம் அதிகம் சிரமப்படத் தேவையில்லை.

★★ ஆரிய சமாஜத்து ஆண்டி வடநாட்டுக்காரர்! ஒரு வடநாட்டுக்காரர் இன்னொரு வடநாட்டுக்காரருக்கு வளைந்து கொடுப்பதில் என்ன வியப்பு இருக்கிறது?

★★ மேலும்; பஞ்சாபிலே போராட்டம் தொடுத்திருப்பவர்கள் சாதாரண அரசியல் கட்சிக்காரர்களல்ல; ஆரிய சமாஜத்தவர்கள்!

ஆரிய சமாஜத்தவர் இடிந்து விழுந்து வரும் இந்து மதத்தின் காவலர்கள்!

ஆக: ஆரிய சமாஜத்தை விரோதித்துக் கொள்வது இந்து மதத்தையே விரோதித்துக் கோள்வதாகும்!

அதனால்தான் பார்ப்பனரின் கால் கழுவி; அந்த அழுக்குப் பாதங்களிலிருந்து வடிந்த சுகாதாரமற்ற நீரை தீர்த்தமென்று கருதிப் பருகிப் பரவசமடைந்த மதச்சார்பற்ற சர்க்காரின் ஜனாதிபதியைப் போலவே அதன் பிரதமரும் ஆரிய சமாஜத்துப் பரதேசியாரின் பாதம் தொழுதிருக்கிறார்!

—இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

விளம்பரமும் விளைவும்!

★

தேவை! உடனே தேவை!

"வாரிசில்லாத ஒரு மாபெரும் கோடீஸ்வரருக்கு சுவீகாரப் புதல்வன் தேவை! அவரது பல வியாபாரக் கம்பெனிகளுக்கும் திரண்ட சொத்துக்கும் உரிமையாகப் போகும் அந்தச் சிறுவன், கதாசிரியர்........எழுதியுள்ள........என்ற நாவலில் ஒரு பாத்திரமான........என்ற சிறுவனைப் போன்ற குணுதசியங்கள் பெற்றிருக்க வேண்டும்! உடனே விண்ணப்பிக்க!"

★

இந்த விளம்பரத்தால் என்ன பலன் தெரியுமா?

விளம்பரம் வெளிவந்த ஒரு வாரத்திற்குள் மேற் குறிப்பிட்ட புத்தகத்தில் விற்காமல் தேங்கிக் கிடந்த ஆயிரக்கணக்கான பிரதிகளும் வாயு வேகத்தில் விற்பனையாகி விட்டன!

[ஒரு ரகசியம்; அந்த விளம்பரத்தை வெளியிட்டதே மேற் குறிப்பிட்ட புத்தகக் கம்பெனிக்காரர்கள்தானும்!]

பைத்தியமாம்; பைத்தியம்!

"என்ன தம்பி, கொஞ்சம் கூட காற்றையே காணுமே!...... என்ன 'பார்க்' கட்டி வைத்திருக்கிருன்கள்; 'பார்க்'!"

"......ம்......"

"கொஞ்சம் பக்கத்திலே உட்காரட்டுமா தம்பி?......தொந்திரவு இல்லையே!"

"இல்லை; இல்லை!...தாராளமாக உட்காருங்கள்..."

"ஏன் தம்பி, உனக்கு இந்த ஊருதானு?..."

"ஆமாம்; இதே தெருதான்; கோடி வீடுதான்!..."

"அப்படியா? ரொம்ப நல்லதா போச்சு! தினம் காற்று வாங்கிறதுக்கு வசதியிருக்கும், உனக்கு! படிக்கிற நேரம் போக மற்றபடி நல்லா பொழுது போகும். இல்லையா?"

"எங்கங்க காற்று வாங்க வர்றது? பள்ளிக்கூடம் திறந்துட்டா, வீட்டுக்கு வந்ததும் படிக்கத்தான் நேரமிருக்கும்! வெளியே கிளம்பின வீட்ல தொலைச்சிடுவாங்களே! இப்ப இந்த 'ப்ளூ' வந்தாலும் வந்தது; 'லீவு' கொஞ்சம் அதிகமா கிடைச்சுது — எப்போதுமா இந்த 'ப்ளூ' உதவி செய்துகிட்டே இருக்கும்?...எப்போதுமா 'பாம் டெஸ்ட்' செய்துகிட்டே இருப்பாங்க?"

"பின்னே என்ன தம்பி; இந்த வயசிலே எல்லாம் படிப்புதானே முக்கியம்? நான் உன்னைப்போல இருக்கும் போதெல்லாம் தினம் ஒரு மணி நேரம்தான் தூங்குவேன். மற்ற நேரமெல்லாம் ஒரே படிப்புதான்!..."

"ஆ! அப்படியா?"

"பின்னே என்ன தம்பி; இல்லாட்டிப் போனு இத்தனை பட்டங்கள்—அதாவது 'டிகிரிஸ்' வாங்கியிருக்க முடியுமா?"

"நீங்க என்னங்க படிச்சிருக்கீங்க...?"

"எம். ஏ.!...எம். ஓ. எல்.! ...பி. எச்டி...!"

"அப்படியா? உங்களை சந்தித்ததுக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷங்க...!"

"பரவாயில்லை தம்பி; ஏன் எழுந்து நிக்கிறே? சும்மா பக்கத்திலேயே உட்காரு! அதிருக்கட்டும்; இந்தத் தெருவிலே ஏதாவது வீடு வாடகைக்குக் கிடைக்குமா? சும்மா முண்ணூறு, முண்ணூற்றைம்பது ரூபாய் மாத வாடகையிலே...?"

"ஐயையோ! இந்த ஊரிலே இருபது ரூபாய்க்கு வீடு கிடைக்கிறதே கஷ்டமாச்சுங்களே! அதுக்கு மேலே பெரிய வீடே கிடையாதுங்களே!"

"ஏதோ, வாடகையைப்பற்றி என்ன; இப்போது ஏதாவது கிடைக்குமா? ரொம்ப அவசரமா எனக்குத் தேவையாயிருக்கே!"

"ரொம்ப அவசரமா?...அப்படி ஒன்றும் இல்லீங்களே! ஊர்க் கோடியிலே இருக்கிற கம்மாளத் தெருவிலே ஒன்பதாம் நம்பர் வீடு காலியாயிருக்கு!"

'அப்படியா'? எனக்குக் கிடைக்சுடுமா அது?"

"ஐயையோ! அதிலே யாருங்க குடியிருப்பாங்க? அது இரண்டு வருஷமாவே காலியாத்தான் கிடக்கு!"

"ஏன்?"

"தெரியாதா உங்களுக்கு? அதிலேதான் பேய் இருக்குங்க! பயங்கரமான பேய் இருக்கு! உடலை வருத்தி உயிரைப் பறிக்கும் கோரமான பேய் இருக்கு!"

"அப்படியா? ஹா ஹ் ஹா... ஹ ஹ் ஹா...!"

"என்னங்க இப்படிச் சிரிக்கிறீங்க...?"

"பேய்தானே தம்பி! எனக்கென்ன பயம்? பேய், பூதம், பிசாசு காட்டேரி, முனீஸ்வரன்–எல்லாம் என் கைப் பிடியில்! என் உதட்டசைவில்! என் கண் பார்வை வீச்சில்! நான் இடும் ஆணைக்குள்!"

"ஐயோ!"

"ஆமாம் தம்பி; நீ குறிப்பிடுகிறுயே அந்தப் பேய் மட்டுமல்ல; எந்தப் பேயும் என் வாடையை நுகர்ந்தாலும் நடுங்கிச் சாகும்!..."

"என்னங்க, உங்களுக்கு மந்திரம் தந்திரம் தெரியுங்களா?"

"மந்திரமுமல்ல; தந்திரமுமல்ல; 'மெஸ்மரிசம்!' உனக்குத் தெரியுமா? உலகத்துத் தீயச் சக்திகளை எல்லாம் வசப்படுத்தும்சக்தி! ஜெர்மன் நாட்டு மேதை ஒருவர் எனக்குக் கற்றுத் தந்த வித்தை!"

"என்னங்க, நீங்க சொல்றது! நான் பேய், கீய்ங்கிறதெல்லாம் பொய்யின்னு நினைச்சுக்கிட்டிருந்தேனே!"

"அப்படியா? நீ இந்த சுயமரியாதைக்கார கும்பல் பேச்சைக் கேட்டுக்கிட்டு உளராதே! பேய் பரம்பரை இருக்கு; அவைகளை அடக்கிற சக்தி என்னைப் போன்ற மேதைங்களிடம் இருக்கு! இப்படித்தான் பேயாவது; பூதமாவதுன்னு சொல்லிக் கிட்டுத் திரிஞ்ச ஒரு பையன் பட்டபாடு உனக்குத் தெரியுமா...?"

"தெரியாதுங்களே!"

"ஐந்து வருடத்துக்கு முந்தி கும்பகோணம் காலேஜ் பையன் ஒருத்தன் செத்துப்போயி மறுநாள் பிழைத்தானே; அந்தக் கதையாவது தெரியுமா உனக்கு?"

"அப்படியா?"

"என்ன இப்படி மலைக்கிறே? உலகமே ரெண்டுபட்டது; மூக்கிலே விரலை வைத்து இப்படியும் ஒரு அதிசயமான்னு வியந்தது! அந்தப் பையன் செத்தக் கதையும், பின் உயிர் பெற்ற விசித்திரமும் உலகப் பெரும் அதிசயமாக வல்லவா இருந்தது! நான்தானே அவன் உயிரை மீட்டுத் தந்தேன்! அப்போது எனக்கு உலகத்திலே எங்கெங்கே இருந்தெல்லாம் அழைப்பு வந்தது தெரியுமா?"

"நீங்க சொல்றதெல்லாம் எனக்கு ஒரே விசித்திரமா இருக்குங்களே!"

"உனக்கு என்ன தம்பி; உலகத்துக்கே அப்படித்தானே இருந்தது! நான் அப்போ கும்பகோணம் கல்லூரியிலே 'புரபொசராக' இருக்கிறேன். என் மாணவர்களில் அந்தத் துடுக்கான மாணவன் மட்டும்தான் எப்போதும் குறும்புத்தனமா பேசிக்கிட்டே இருப்பான்! பேயாவது, பூதமாவது; எல்லாம் வெறும் பிரமை: கட்டுக் கதை; அயோக்கியர்கள் திரித்துவிட்ட சரடு; அப்படி இப்படின்னு ஏதாவது முட்டாள்தனமாக உளறிக் கிட்டே இருப்பான்!

"நான்கூட இந்தக் கணம் வரையிலும் அப்படித்தானே நினைச்சுக்கிட்டிருந்தேன்...!"

"நீ மட்டுமென்ன; பள்ளிக்கூடப் பசங்க ரொம்ப பேரு அப்படித்தான் துள்ளித் திரியுருங்க! கேளேன் அவன் கதையை! எனக்கு அந்தப் பையனுக்கு சரியான புத்தி கற்பிக்கணும்னு ஆசை! அவனைக் கூப்பிட்டுச் சொன்னேன், 'வேண்டாமடா இந்த விபரீத புத்தி' என்று! அவன் அடங்குவானு? என்னை வாத்தியாருங்கிறதையும் மறந்துட்டு என்னென்னமோ பேசினுன்!"

"அப்புறம்...?"

"நான் சும்மா இருப்பேனு? அன்றைக்கு இரவு என் வேலையைக் காண்பிக்கிறதா முடிவு செய்துட்டேன்!"

"என்னங்க அது?"

"அவசரப்படாமல் கேள்! 'ஹாஸ்டலில்' அந்தப் பையன் இரவு சாப்பாட்டை முடித்து விட்டுப் படுத்து விட்டான். அப்போது அவனை யாரோ தட்டி எழுப்புவதை உணர்ந்து எழுந்தான். எதிரே அவன் அப்பா நின்று கொண்டிருந்தார்! அந்த இரவுநேரத்தில் திருவாரூரிலிருந்து அவர் எப்படி வந்திருக்க முடியும்? பையனுக்கு ஒரே வியப்பு...!"

"பின் எப்படித்தான் அவன் அப்பா அங்கு வந்தாராம்?"

"அப்பாவா அது? நீ ஒரு பைத்தியம்!"

"அப்படி இல்லாவிட்டால் பின்னே யார்?"

"பேய் தம்பி; பேய்! காவேரிக் கரை பேய் என்பது கும்பகோணத்தில் பிரசித்தம். காவேரிக்குக் குளிக்க வந்த யாரோ ஒரு பெண் சுழலில் சிக்கிக்கொண்டு இறந்துவிட்டாளாம்! அவள் பேயா மாறி எத்தனையோ பலிகளை வாங்கிக்கிட்டிருக்கா! நீ தவருமல் பேப்பரில் பார்க்கலாமே; ஒவ்வொரு வருடமும் கும்பகோணம் காலேஜிலே படிக்கிறப் பையன்களில் ஒருத்தன் ரெண்டு பேரு தவருமா காவேரியிலே செத்துக்கிட்டுதான் இருப்பானுங்க, குளிக்க வர்ற சமயத்திலே! எல்லாம் அந்தப்பொல்லாத பேயின் சேஷ்டைதான்!"

"ம்...அப்புறம்?"

"அந்தப் பேயைத்தான் நான் அன்று இரவு சந்தித்தேன். என்னையும் கண்டு விட்டு முதலில் சீறிச்சு அது. அவ்வளவுதான்; ஐந்து விரலையும் விரித்து மடக்கினேன்; பேய் என் சக்தியைப் புரிஞ்சுக்கிட்டு பணிஞ்சு போச்சு. நான் அதைத்தான் அந்தப் பையனின் அப்பா உருவத்தில் போகச்சொன்னேன்!"

"ஏன்?..."

"ஏனு? அழைச்சுக்கிட்டு காவேரிக் கரைத் தோப்புக்கு வந்து, தன் சுய பேய் உருவம் எடுத்து, அவனுக்கு புத்தி சொல்லத்தான்! நான் சொன்னபடியேதான் அந்தப் பேயும் செய்திச்சு! ஆனால், என்ன காரணமோ, நடுவிலே அதன் சுயகுணம் வெளிப்பட்டு ரொம்ப விபரீதமாய் போச்சு!"

"என்ன நடந்தது?"

"நான் பேயுக்குஆணையிட்டுட்டு அறையிலே படுத்துட்டேன். பையன் புத்தி வந்து இரவே 'ரூமு'க்கு வந்திருப்பான்னுதான் நினைச்சேன்! ஆனால்...பொழுது விடிஞ்சதும்தான் விவரம் புரிந்தது. அந்தப்பையன் காவேரிக்கரையிலே செத்துக் கிடக்கான்னு கேள்விப்பட்டு நான் ஓடினேன்! என்ன அக்கிரமம்! வாயெல்லாம் ரத்தம் கசிய — விழி பிதுங்கிக் கிடக்க—உடல் விறைத்திருக்க —அவன் பிணமாகிக் கிடந்தான். பேய் அவனை பலிவாங்கி விட்டது!"

"நீங்க என்ன செய்தீங்க?"

"என்ன செய்தேனு? அவன் உயிரை நான் மீட்டுத் தர்றதா எல்லோரிடமும் சொன்னேன். ஒருத்தரும் என்னை நம்பலலே! சில குறும்புக்காரப்பசங்க 'சாவித்திரியோட அண்ணன் டோய்!' எனறெல்லாம்கூட கிண்டல் செய்தானுங்க! நான் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் அந்தப் பேயைத் தேடினேன். ஆனால், அந்தப் பேயோ எங்கே போய்விட்டது தெரியுமா? காவேரிக் கரை பேய் சூயஸ் நதிக் கரைக்குப்போய் விட்டது! விட்டேனு நான்? என் சக்தி கண நேரத்தில் அதை கும்பகோணத்தில் நிறுத்தி விட்டது."

✻ 8-ம் பக்கம் பார்க்க



கே. வெங்கடேசன், சிந்தாதிரிப் பேட்டை.

(?) எழுத்தாணியாரே! நீர் சோதிடம் பார்ப்பது உண்டா?

உண்டு! அமெரிக்கா எப்போது பொதுவுடைமை நாடாகும்? போகிற போக்கைப் பார்த்தால் ரஷ்யா தனிவுடமையாகி விடுமா? திராவிட நாடு எப்போது தனியரசாக மலர்ந்து சமத்துவ சமதர்மபுரியாகக் காட்சிதரும்?

'திருப்பதி மொட்டை'களுக்கு எப்போது தெளிவு பிறக்கும்? அணுகுண்டு சோதனைகள் தடைசெய்யப்படுமா? ஆபாச ஏடுகளும், மேடைகளும் மறைவதெந்நாள்? ஏற்றத் தாழ்வு தொலைவது எப்போது? இத்தகைய "அரசியல் ஆரூடம்" நான் பார்ப்பதுண்டு.

புரட்சிதாசன், புதவை.

(?) "மலம் மூடத்தான் மலர் பறித்தேன் என்றால் குளிர் மலர்ச்சோலை கோவென்றழாதா?" யார்—எதற்காக—எப்போது பாடியது?

இருபத்து ஐயாயிரம் கொடுத்தவரைத் தடுத்தவரைப் பற்றி உள்ளூர்க்காரர் 1949-ம் ஆண்டில் பாடியதாகும் இந்த வரிகள்! வரிகள் சிலவற்றை டி. டி. கே. வாபஸ் வாங்கியது போலவே அவரும் இந்த வரிகளை வாபஸ் வாங்கிக் கொண்டதாக இப்போது கேள்வி!

தர்மராசன், கும்பகோணம்.

(?) சடங்கு சாஸ்திரம் புரோகிதம் முதலிய எந்த நம்பிக்கையையும் இழக்காத வைதீகப் பார்ப்பனர்களாம் டி. டி. கே., வெங்கட்ராமன், சீனுவாசன், வாசுதேவ அய்யங்கார், சம்பத் அய்யங்கார் முதலியவர்களுக்கு ஓட்டுப்போட்ட 'வீரர்களுக்கு' என்ன தண்டனை அளிக்கலாம்?

அவர்கள் ஐந்து வருடகாலம், மறுதேர்தல் வரையில் பிராமணாள் ஓட்டல்களில் சாப்பிடக்கூடாது என்று தண்டனை விதிக்கப்பட்டு விட்டதே!

தேசபக்தன், மதுரை.

(?) நேரு; தன் தோட்டக்காரர்களுக்கு தொளாயிரம் ரூபாய் சம்பளம் தருகிறாராமே—அப்படியானால் அவருக்குத் தரப்படுகிற சம்பளம் நியாயந்தானே?

"பிறந்தாலும் நேரு வீட்டுத் தோட்டக்காரனாய்ப் பிறக்க வேண்டும்; பிறக்காதபட்சம் இறப்பது மேல" என்று தோட்டக்காரர்கள் மாநாட்டில் தீர்மானம் போட்டு அனைவரும் தற்கொலைசெய்து கொண்டால் அதுகூட நியாயந்தானே?

திருவேங்கிடம், தேனி.

(?) சட்டசபையில் ஒருவர் அடிக்கடி சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்டு மூக்குடை படுகிறாராமே; யார் அவர்?

"மகாத்மா காந்தியின் மீது ஆணை" அவருடைய பெயரைச் சொல்லமாட்டேன். அவர் மூக்கைப் பார்த்து நீரே தெரிந்து கொள்ளும்.

பி. குழந்தைவேலன், கரூர்.

(?) நீங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிபோடாமல் ஆளுவீர்களா?

யாரும் அதுபோலச் சொல்லவில்லையே; ஏழைகளைப் பாதிக்கும் வரிகளைப் போடாதே என்றுதான் கூறுகிறோம். உன் கண்களைக் கொடு; பதிலாக ஒரு சித்திரம் தருகிறேன் என்பது போல பாட்டாளியின் உடலை வாட்டித் திட்டம் தருகிறேன் என்று காங்கிரஸ் ஆட்சியாளர் கூறுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆறுமுகம், கொழும்பு.

(?) நேரு, போப்பாண்டவர், ஐக், குருஷேவ், டிட்டோ, மாசேதுங் ஆகியோர் உலகத்தின் ஆறு தலைவர்கள் என்று ஒரு மேல்நாட்டுப் பத்திரிகை வர்ணித்திருக்கிறதாமே; அது பற்றி உமது கருத்தென்ன?

ஐசன்ஹவர் அமெரிக்க முதலாளித்துவத்தின் முன்னோடும் பிள்ளை. குருஷேவ் பொதுவுடமைத் தலைவர். டிட்டோ ரஷ்யாவின் போக்கில் அதிருப்தி கொண்ட புதுவகைக் கம்யூனிஸ்ட். மாசேதுங் மண்ணுக்கேற்ற கொள்கையென வகுத்துக் கொண்ட கம்யூனிஸ்ட தலைவர் போப்பாண்டவர் மதத்தின் தலைவர்; ஆண்டவனின் பிரதிநிதியெனச் சொல்லிக் கொள்பவர். பண்டித நேருவோ இந்த ஐவருக்கும் நல்லபிள்ளை. ஆறு பேரையும் சேர்த்து ஒரு ஆறுமுகக் கடவுளைப் படைப்பதைவிட இன்னும் மூன்று பேரை சேர்த்த ஒன்பது தலைவர்களாக்கி நவக்கிரகக் கொலுவொன்று வைக்கலாம்.

என். குருசாமி, காரைக்குடி.

(?) விற்பனை வரியை முதன் முதல் போட்ட ஆச்சாரியார்; இப்போது வரிகளை எதிர்க்கிறாரே; அது சரியா?

அந்த—ரூபாய்க்கு ஒரு பைசா விற்பனை வரியை காரசாரமாக எதிர்த்தவர்கள் இப்போது எல்லா வரிகளையும் ஆதரிப்பது மட்டும் பெரிய நியாயமா?

வி. என். சிதம்பரம், சீரங்கம்.

(?) விஷக் காய்ச்சலை "புளு" என்கிறார்களே; ஏன்?

"புளு" என்றால் தமிழில் நீலம் என்று பொருள். விஷத்திற்கு நீல வர்ணந்தான்! அதனால் விஷக்காய்ச்சலை "புளு" என்கிறார்கள் போலும்!

கருணாகர், முல்லை

(?) தமிழ்நாடு என்ற பெயர் விரைவில் வருமா?

ஏன்: காமராசருக்குத் தமிழ் உணர்ச்சி வருமா என்று சுருக்கமாகக் கேட்பது தானே!

ஜூலை 10-ந் தேதி விற்பனைக்குக் கிடைக்கும்!

சத்தான கருத்துச் சொல்லும்

முத்தாரம்

- உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள்!
- சிந்தைக்கு விருந்தளிக்கும் சிறு கதைகள்!
- அனைத்திலும் புதுமைமிக்கதாய் இனிமைகொண்டதாய்
- எழில் குலுங்கும் தமிழ்ப் பொழிலாய்த் தயாராகிறது!

விற்பனையாகிறது!

உயர்ந்த எண்ணங்கள் குலுங்கும் கருத்துக் கருவூலங்கள்!

மாறன், எம். ஏ. எழுதிய

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்-ஆகியோரின் முன்னுரையுடன்

விலை: ரூபாய் 1—50

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி. பி. டி. எழுதிய

அபிசீனிய அடிமை

மு. கருணாநிதி அவர்களின் முன்னுரையுடன்

விலை ரூபாய் 1.

விபரங்களுக்கு:

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை ரோடு, : : திருச்சி—8.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு